# இலங்கைத் தூதரகத்துக்கு சென்னையில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு!

சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கும், மகா போதி கட்டிடத்துக்கும் இனந்தெரியாத நபர்களினல் அண்மையில் குண்டு வீசப்பட்டதாக கூறப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து—மேற்படி இடங்களுக்கும் மற்றும் இலங்கை அரசு சார்பான அலுவலகங்கள் இருக்கும் கட்டிடங்களுக்கும் பலத்த பொலீஸ் பந்தோபஸ்தும் பாதுகாப்பும் இந்திய அரசினல் அளிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி 23411 விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, ஐப்பசி 24 (10-11-74) ஞாயிறு நவ. 10 ஷவ்வா 25 புத்தகம் 28 இதழ் 11

# சிறிமாவுக்கு டெல்லியில் கறுப்புக்கொடி!

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு இந்தியத் தலைநகரான புதுடெல்லியில் கறுப்புக்கொடிகாட்டப் பட்டது! இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து — அவர்களுக்கு நீதி வழங்குமாறு கோரியே இந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரானுக்கு சென்றிருந்த இலங்கைப் பிரதமர் கடந்த 31-10-74ல் டெல்லியில் தங்கியிருந்தார். டெல்லி விமான நிலையத்திலிருந்து ராஜ்பவனுக்கு அவர் செல்லும் வழியிலேயே, இந்தக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. உலகத் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த தொண்டர்கள் இந்தக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்தினர்.



உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம், இலங்கைப் பிரதமருக்கு ஏற்கெனவே எழுதியிருந்த பகிரங்க மடலில்—

"தாங்கள் சென்றமுறை இந்தியா வந்திருந்த போது சென்னையில் தங்களுக்கு கறுப்புக் கொடி காட்டினேன்; மீண்டும் இந்தியா வருகிறீர்கள். அன்று நான் கறுப்புக்கொடி காட்டிட எந்தஎந்தக் காரணங்கள் முன்னின்றனவோ அவை இன்று மேலும் வளர்ந்த நிலையிலேயே உள்ளது."

—என்று ஏற்கெனவே அறிவித்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

## 'மா'வட்டம் தமிழனுக்கு!

5ம், 7ம், வகுப்புக்களுக்கு உபகாரச் சம்பளம் பெறும் மாணவர்கள் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட அடிப்படையில் நடைபெற்றதாகக்கூறப்படும்இத்தெரிவில் அகில இலங்கையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளோர் தொகை 1500. இதில் சிங்களவர்கள் 1195-தமிழர்கள் 184—முஸ்லிம்கள் 107. இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குகொண்ட தமிழர்களுக்கு சிங்கள சோசலிசம் தந்திருக்கும் 'மா'வட்டம் இதுதான்! சனத்தொகை வீதப்படி மூன்றில் ஒருபங்கு(அதாவது 500 இடங்கள்) கிடைக்கவேண்டிய தமிழினத்துக்கு ஆக 184 மட்டும்தான்! இதற்குப் பெயர்தான் சமதர்மமாம்-இந்த நாட்டில்!

# 10 வயதுச் சிறுமியை உருட்டி மிரட்டினர்!

## பிரான்சிஸ்வீட்டில் சி.ஐ.டி.கெடுபிடி!

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர்களில் ஒருவரான பிரான்சிஸ் என்னும் இளைஞர் வீட்டில் புகுந்து இரகசிய பொலிசார் வெறியாட்டம் நடத்தியுள்ளதாகத்தெரிகிறது.

பிரான்சிஸ் வீட்டில் இல்லாத சமயம் அவரைத்தேடி அவரது வீட்டிற்குள் புகுந்த இரகசியபொலிசார், அங்கிருந்த பிரான்சிசின் 10 வயது தங்கையை பயமுறுத்தினார்களாம். "உன்னை ஜீப்பில் ஏற்றிக்கொண்டுபோய் சிறையில் வைப்போம்; உன் அண்ணன் எங்கு இருக்கிறான், இப்போதும் வீட்டுக்கு வருகின்றவனா? எப்போது கடைசியாக வீட்டுக்கு வந்தான்? என்றெல்லாம் கேட்டு, அச்சிறுமியை அச்சுறுத்தினராம்!

பின்னர் வீட்டுக்குள் சென்று ஆராய்ந்த அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த பிரான்சிசின் பெரிய தாயாருக்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த ஊசிமருந்தை எடுத்துக் கொண்டுசென்றார்களாம். வீட்டில் மாட்டியி

—5-ம் பக்கம் பார்க்க

O சிறையிருக்கும் தமிழ் இளைஞருக்கு

# உணவுகொடுக்கவும் உரிமை இல்லையா?

"சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு அவர்களது குடும்பத்தினரும் உறவினர்களும் உணவு கொண்டு சென்று கொடுக்கும் உரிமைகூட மறுக்கப்படுகிறது. இந்த அநியாயத்தை உடன் நிறுத்துங்கள்!"

—இவ்வாறு தந்தை செல்வா அவர்கள் நீதி

—7-ம் பக்கம் பார்க்க

## நீதியமைச்சருக்கு செல்வா கடிதம்!



## இவ்வார நகைச்சுவை!

"சேர் பொன். இராமநாதனுக்குப் பின்னர் தமிழர்களுக்காக அதிகம் சேவை செய்திருப்பவன் நானே!"

—பதியுதீன் மாமூத் (கல்முனைக் கூட்டத்தில்)

## ஐ. நா. மனித உரிமைகள்தினம்

### தமிழர் கூட்டணி ஆலோசனை!

எதிர்வரும் டிசம்பர் 10ம் நாள் உலக மடங்கிலும் கொண்டாடப்படும் மனித உரிமைகள் தினத்தை ஈழத்தில் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் தமிழர் நாளாக அனுட்டிப்பது பற்றி தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு ஆராயவிருக்கிறது. வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களை, அன்றைய தினம் தங்கள் தங்கள் நாடுகளில் ஆர்ப்

—5-ம் பக்கம் பார்க்க

# இவர்தான் நடேசானந்தம்!

மீன்பாடும்தேனுடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திலீடுபட்டதற்காக இன்று சிங்கள ஏகாதிபத்தியத்தினல் கைதுசெய்யப்பட்டு புதுக்கடை சிறைச்சாலையில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் செல்வன் பூ. நடேசானந்தம் இவர்தான். இருபது வயதேநிரம்பப்பெற்ற இந்த இன விடுதலை வீரர்-கோட்டைக்கல்

—5-ம் பக்கம் பார்க்க



சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் பிரச்சினை:

# அனைத்துலக நிறுவனம் அக்கறை!

கடந்த இரண்டாண்டுகளுக்கு அதிகமாக நீதி விசாரணையோ விடுதலையோ இன்றி அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் சிறைக்கைதிகளாக இலங்கை அரசாங்கத்தால் சிறைவைக்கப்பட்டிருக்கும் சுமார் அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களின் பிரச்சினை குறித்து, "இன்டர் நேஷனல் அம்னஸ்டி" (International Amnesty) எனும் அனைத்துலக நிறுவனம் அக்கறைகாட்டத் தொடங்கியுள்ளது.

மேற்கண்ட உலக நிறுவனம் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக இலங்கையில் நடைபெறும் இந்த அநீதியை இலங்கை அரசின் கவனத்துக்கு கொண்டு வந்து, அவர்களை ஒன்றில்விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறது. இந்த உலக நிறுவனத்தின் அக்கறையை அடுத்தே கடந்த சில நாட்களாக சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றி ஆட்சியாளரும், அவர்

—5-ம் பக்கம் பார்க்க

## அமரர் இராசமாணிக்கம் இரங்கற் கூட்டங்கள்

இடம்: காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானம்.
திகதி: 9-11-74 சனிக்கிழமை மாலை 6 மணி.
தலைமை: திரு. தா. திருநாவுக்கரசு.
பேசுவோர்: தமிழர் தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், எம். எஸ். செல்லச்சாமி, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வி. ஆனந்தசங்கரி, அடலேறு ஆலாலசுந்தரம், வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், வி. குமரகுரு, சி. கதிரவேற்பிள்ளை, அ. தங்கத்துரை.

●

இடம்: திருகோணமலை முற்றவெளி தியாகி சிவகுமாரன் அரங்கு.
நாள்: 10-11-74. மாலை 6 மணி.
தலைமை: அ. வரதராசா. (யாழ் இ.பே.செயலாளர்)
சொற்பொழிவாளர்கள்: பா. நேமிநாதன் பா.உ. அ. தங்கத்துரை பா. உ. மற்றும் பலர்.
இரங்கற் கவிதை: கவிஞர் வணங்கா முடி.

## யாழில் எழுந்த தமிழோசை

அடுத்த இதழிலிருந்து மீண்டும் ஒலிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# குமாரசூரியர் அமைச்சரானபின்

கடந்த (28-5-70) பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்து மந்திரிசபை ஒன்று அமைக்கப்பட்டது. புதிய அமைச்சர்கள் விசுவாசப்பிரமாணம் எடுத்தபின் இராணிமாளிகையின் வாசற்படிகளில் அன்றைய கவர்னர் ஜெனரலுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். இந்தப் புகைப்படம் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அநேகமாகத் தேசிய உடை அணிந்து நின்ற அமைச்சர்களிடையே மேல் நாட்டுப் பாணியில் சூட் அணிந்து ஒருவர் காணப்பட்டார். இவரை செல்லையா குமாரசூரியர் தபால் தந்தி அமைச்சர் என்று பத்திரிகைகள் வர்ணித்து இருந்தன.

அன்று வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் முகத்தில் மட்டுமல்ல—வாழ்நாள் முழுவதும் அரசியலைத் தொழிலாகக் கொண்டோர்—தேர்தலில் வெற்றிகண்டு நின்றவர்கள் — தோற்கடிக்கப்பட்டவர்கள் — இன்று சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களாக மாறியிருக்கும் பெரும் புள்ளிகள் எல்லோர் முகத்திலும் கூட ஒரு கேள்விக்குறி! யார் இந்த செல்லையா குமாரசூரியர்? எங்கிருந்துதோன்றியிருக்கிறார்?

தெருக்களிலும், பஸ்களிலும், ரயில்களிலும், சந்தைக் கூட்டங்களிலும் எங்கு பார்த்தாலும் ஒரே கேள்வி யாரப்பா இந்தச் செல்லையா குமாரசூரியர்? எவருக்குமே தெரியவில்லை. அரசியலில் பேர் ஊர் தெரியாத விலாசமில்லாத பேர்வழியாக தமிழ் மக்களிடையே அறிமுகப் படுத்தப்பட்டார் இவர். காலம் போகப் போக கொழும்பு சுதந்திரக் கட்சியின் அலுவலகத்திலிருந்து

## சந்திக்கவேண்டிய எதிரி சாதாரணமானவன் அல்லன் சிந்தித்து செயலாற்றியே அவனை முறியடிக்கவேண்டும்!

கிளம்பிய விபரங்கள் பரவத் தொடங்கின.

சிங்கப்பூரிலே பிறந்து, லண்டனிலே படித்து, கொழும்பிலே வியாபாரம் செய்து, பலாங்கொடையில் பண்டாரவர்க்கத் தினருக்குப் பளபள பங்களாக்கள் கட்டிக் கொடுத்து அவர்களுடன் மிகவும் பரிச்சயம் கொண்ட கட்டிடக் கலைஞர் இந்த செல்லையா குமாரசூரியர் என்று தெரியவந்தது.

சுதந்திரக் கட்சியின் இனவெறிகொண்ட, வகுப்புவாதக் கொள்கையை மூடி மறைத்து உலக அபிப்பிராயத்தை திசைதிருப்பிச் செல்ல தமிழ் பெயரைக் கொண்ட—அதே சமயத்தில் தமிழினம், தமிழ் மொழி, தமிழ் கலை, தமிழ் கலாசாரம், தமிழ் இலக்கியம், முதலியவற்றின் பெருமையை அறிந்து கொள்ளாத உணர்ச்சிகள் அற்ற ஒருவரைப் பண்டா குடும்பத்தினர் தேடியலைந்து கண்டுபிடித்த முத்து இந்த செல்லையா குமாரசூரியர்.

பாராளும் மண்டபத்துள் நுழைந்திட வேண்டும், மந்திரியாகிடவேண்டும், மாலைகள் சேர்த்திடவேண்டும், மாணிக்கக் கட்டிலில் தூங்கிட வேண்டும். மாளிகையிட வேண்டும், மின்னும் வைரங்கள் பூண்டிட வேண்டும், மரகதமணிகள் அணிந்திடவேண்டும் என்று ஆண்டாண்டுகாலம் அவதிப்பட்டும் அதுகிடைக்காத தமிழ் பகைவர்கள் வாழ்ந்திடும் நாட்டிலே—மாண்புமிகு மந்திரியாக மறைந்திருந்த செல்லையா குமாரசூரியர் மாற்றப்பட்டுவிட்டார். தேடக்கிடைக்காத இந்தச் செல்வத்தைக் கொடுத்த எஜமானர்களுக்கு என்ன கைமாறு செய்திடலாம், எனத் துடிக்கிறது அவரது இதயம்!

"எதுவுமே வேண்டாம், இந்த நாட்டிலே தமிழினம் என்று ஒன்று இருந்திடல் கூடாது-ஒரே இனம் அதுவே சிங்கள இனம்-ஒரே மொழி அதுவே சிங்களமொழி-ஒரே மதம் அதுவே பௌத்த மதம்- ஒரே கலை கலாசாரம் அதுவே சிங்கள பௌத்த கலை கலாசாரம் —இந்த "சோசலிச"த்தை அடைந்திட தமிழ் மக்களை அடிமைப் படுத்திக் கொடுத்தால் போதும் குமார்! பணபலம் வேண்டுமா? அதுதான் கூட்டுறவு சங்கங்கள் உண்டே. உங்கள் ஆட்களை கமிட்டியில் போடுகிறோம். படைபலம் வேண்டுமா? இராணுவ முகாம்களே அமைத்துக் கொடுக்கிறோம் — மக்கள் பலம் வேண்டுமா? கூட்டுறவு ஊழியர்கள், வாத்திமார்கள் உண்டு. பத்திரிகை பலம் வேண்டுமா? தினகரனையே பிடித்துத்தருகிறோம். பிரச்சாரபலம் வேண்டுமா? வேறு பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போட்டுத் தருகிறோம். பாதுகாப்பு வேண்டுமா? யார் யாரிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஒரு பட்டியல் தாருங்கள் நாலாவது மாடியுண்டு, சிறையுண்டு, சித்திரவதையுண்டு நீங்கள் தரும் பட்டியலைச் சமாளித்திட" என்றார்கள் அரச குடும்பத்தினர்.

எனவே, குதித்து விட்டார் களத்தில் குமாரசூரியர். சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாக சிங்கள சோசலிசத்தின் பிரச்சாரப் பீரங்கியாக அவரது சேவை "தமிழினம் ஓர் கலப்பு இனம்" என்ற சித்தாந்தத்துடன் ஆரம்பமாகி, "தமிழ் பெண் சிங்களவனைக் கல்யாணம் செய்து கொண்டால் பிள்ளை பிறக்காதா?" என்ற தத்துவமாக வளரத் தொடங்கியது.

சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு வழிகளாலும் தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுக்கப் புறப்பட்ட பிரமுகர்கள் சிலர் தமிழினத்தின் எதிரியின் ஏஜண்டுகளாக அவரால் மாற்றப்பட்டும் விட்டனர். திறமை, நேர்மை, தியாக மனப்பான்மை, ஓயாத உழைப்பு இவையெல்லாம் பிற்போக்குவாதம் ஆக்கப் பட்டன. இவற்றில் நம்பிக்கை வைத்தவர்கள் பின் தங்கி விட்டனர்.

குமாரசூரியருக்குக் குடைபிடிப்பவர்கள், துரையப்பாவுக்குத் துதி பாடுபவர்கள் தியாகராசாவைப்பற்றி திதிப்பாக பேசுபவர்கள், அருளம்பலத்துக்கு ஆரத்தி எடுப்பவர்கள், ராசன்செல்வநாயகத்துக்கு ராச வரவேற்பு கொடுப்பவர்கள் எல்லோருமே முற்போக்காளர்களாகவும் கருதப்பட்டனர். இவர்களுக்கே பதவி உயர்வு, இவர்களுக்கே சம்பள உயர்வு, இவர்களுக்கே கூட்டுறவு ஊழியர் பதவி. இவர்களுக்கே விரும்பிய இடத்துக்கு இடமாற்றம், இவர்களுக்கே சொத்துசுகம் என்ற நிலை வளர சந்தர்ப்பவாதிகளும், காட்டிக்கொடுப்பவர்களும் பெருகத் தொடங்கினர். அறிவுலகுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய ஆசிரியர்கள் பெருந்தொகையாக தமிழினத்தின் அழிவுக்கு வழிகாட்டும் சந்தர்ப்பவாதிகளாக மாறி பல சலுகைகளை அனுபவிக்க துணிந்தும் விட்டனர். ஆசிரியர்களை நம்பியிருந்த தமிழ் மாணவர்கள், சிறந்த விஞ்ஞானிகளாக, கணிதமேதைகளாக, பொறியியலாளர்களாக, டாக்டர்களாக, சட்டநிபுணர்களாக வரவேண்டியவர்கள் மண்ணைக் கிளறி மரவள்ளி நடும் மந்திரிக்கு மாலையிடும் பொம்மைகளாக மாற்றப் பட்டும் வருகிறார்கள்.

இந்த மானங்கெட்ட மாற்றங்களையெல்லாம் மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று 'தினகரன்' மூலம் செய்திகளாகவும் அறிக்கைகளாகவும் உற்பத்திசெய்துவரும் அமைச்

### திக்கற்ற அரியம்

சர் குமாரசூரியர் 'தமிழ் மக்கள் சிந்தித்து செயலாற்றும் கட்டம் வந்துவிட்டது என்று அண்மையில் (15-9-74 தினகரனில்) ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அமைச்சர் தமிழ் மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்களில் அறிவுள்ள அர்த்தமுள்ள, எமது ஆதரவையும் பெற்றுக் கொண்ட ஒரேயொரு வேண்டுகோள் இதுவே.

ஆம்— தமிழ் மக்கள் சிந்தித்து செயல்படவேண்டிய கட்டம் வந்து விட்டது. குமாரசூரியர் மந்திரியானபின் தமிழ் மக்கள் அடைந்திருக்கும் பெறுபேறுகளை அலசுவோம்.

சாதாரண சட்டமாக இருந்த சிங்கள மொழிச் சட்டமும், மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமை மறுப்புச் சட்டமும் அரசியல் சாசனத்துள் நுழைக்கப்பட்டு சாதாரண பெரும்பான்மை பலத்தால் மாற்ற முடியாத சட்டமாக்கப் பட்டது குமாரசூரியர் அமைச்சரான பிறகுதான்.

பௌத்த மதமே அரச மதம் ஆக்கப்பட்டு அதுகூட அரசியல் சாசனத்துள் நுழைக்கப்பட்டதும் இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம் எல்லாம் புறக்கணிக்கப்பட்டதும் குமாரசூரியர் அமைச்சராக வந்த பிறகு தான்!

தமிழர் கூட்டங்கள் கூட தடை — தமிழர் அரசியல் பேச தடை—தமிழ் சஞ்சிகைகள் பத்திரிகைகள் இறக்குமதிக்கு தடை — தரமான தமிழ் படங்களுக்குத் தடை —தமிழ் பெருமை பாடும் பாரதி பாடல்களுக்குத் தடை—தமிழர் வெளி நாடு போகத் தடை—தமிழ் பெரியார்களின் படங்கள் தமிழர் வீடுகளில் தொங்குவதற்குத் தடை என்று தடைகள் போட்டு சிங்கள அரசியல் வளர்ந்ததும் குமாரசூரியர் அமைச்சர் ஆனபிறகு தான்!

தமிழ் பகுதி உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து —உபதேர்தல்களை நடத்தமறுத்து —நடக்கவேண்டிய முனிசிப்பல் தேர்தல்களை ஒத்திப் போட்டு — தமிழர்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைப் புறக்கணித்து—தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துக் கொண்டிருப்பதும் குமாரசூரியர் அமைச்சராக இருக்கும் அரசுதான்.

தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழகக் கத

## தமிழன் வீழ்ந்த வரலாறு!

வடைப்பு—தமிழ் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்படுவது -சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழ் பிரிவு வகுப்புகள் மூடப்படுவது—இவை எல்லாவற்றையும் செயல்படுத்திவருவது குமாரசூரியர் அமைச்சராக இருக்கும் அரசுதான்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் கருத்துக்களைப் பத்திரிகைகளிலும், வானொலியிலும் இருட்டடிப்புச் செய்து—தமிழர்களைப் பற்றிய தவறான செய்திகளை பரப்பிவருவதும் குமாரசூரியர் அமைச்சராக இருக்கும் அரசுதான்!

தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்படுவதும்— சிறைக்குள் தள்ளி சித்திரவதை செய்யப்படுவதும் — நாய்களைச் சுடுவதுபோல தமிழர்கள் சுட்டுவீழ்த்தப் படுவதும்—சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு தமிழர்கள் நரபலி கொடுக்கப்படுவதும் ஆரம்பமானது குமாரசூரியர் அமைச்சர் ஆனபின் தான்.

தமிழையும் சைவத்தையும் வளர்க்கதமிழ்பெரியார்களால் ஆரம்பித்து வளாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியும் வேறு ஸ்தாபனங்களும் சுவீகரிக்கப்பட்டு —சிங்கள பௌத்த குடியேற்றங்களாக— பல்கலைக் கழக யாழ். வளாகம் என்ற பெயரில் மாற்றியமைக்கப்படுவதும் குமாரசூரியர் அமைச்சர் ஆனபிறகுதான்.

மலைநாட்டுத் தோட்டங்களைச் சுவீகரிப்பதும் — அங்குள்ள தமிழ் தொழிலாளர்களை மிரட்டி சிங்களபௌத்தர்களாக பெயர்மாற்றம்— இனமாற்றம்— மதமாற்றம் செய்வதும்—மறுப்பவர்களை வேலையிலிருந்து நீக்குவதும் உணவு விநியோகத்தைக் குறைத்து பட்டினிச்சாவுகளை ஏற்படுத்துவதும் பிச்சை எடுப்பவர்களைச் சவுக்கால் அடித்து லாரிகளில் ஏற்றிக்காடுகளுக்குள் கொண்டு போய் தள்ளி விட்டு வருவதும் — காடு வெட்டி பயிரிட்டுப் பசியைப்போக்க முயலும் தமிழ் தொழிலாளர்களை பொலிஸ் படை கொண்டு தாக்கி விரட்டியோட்டுவதும் குமாரசூரியர் அமைச்சர் ஆனபின் தான் ஆரம்பமானது.

தேயிலை, ரப்பர் ஏற்றுமதி போல. தமிழ் தொழிலாளர்களைக் கப்பல்களில் ஏற்றிக் கடலில் தள்ளிவிடுவதும்— "தமிழன் மரம் ஏறுவான்" என்பது போன்ற கருத்துக்களை சிங்களப் பாடப் புத்தகங்களுக்குள் திணித்து சிங்கள மாணவர்களிடையே போதித்து வருவதும் குமாரசூரியர் அமைச்சர் ஆனபின் தான்!

காங்கேசன்துறை துறைமுகத்திட்டம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகத் திட்டம், அச்சுவேலி கைத் தொழிற்பேட்டை, யாழ். பூநகரி மகாதேவா பாலம் அமைப்பு போன்ற பழைய ஆட்சியினுல் ஆரம்பிக்கப் பட்ட திட்டங்களை நிறுத்தி

—7-ம் பக்கம் பார்க்க

★ தீபாவளிக் கவிதை

## கொடுமைகளை கொல்ல எடு சக்கரம்!

காயாம்பூ மேனியனே
கமலக் கண்ணு!
நீயிருக்கும் இடமெங்கே?
நாமிங்கே படும்துயரை
நன்ருய் அறிந்தவன் நீ!
ஏனய்யா உன் இதயம்
எம் பக்கம் இரங்காதோ

இலங்கைத் தமிழ் மன்னன்
இராவணன் ஆந்யோரின்
கொடுமை பொறுக்காமல்
கொதித் தெழுந்து,
பூவுலகில்
இராமனுய் அவதரித்து,
தேவர் துயர்
தீர்த்தவன் நீ!

பாண்டவர்கள்
பக்கம் நின்று
பாம்புக்கொடியோனின்
பகைமைதனை அழிக்க
கிருஷ்ணனுய் அவதரித்து
கீர்த்தி பல புரிந்தவன் நீ!

அரக்கத்தன மொழித்து
அமைதியை நிலைநாட்டி
வாழ்விலேயின்ப
விளக்கேற்றவென்றே
உலகில் அவதரிக்கும்
உத்தமன் நீ!

ஏனய்யா நாங்கள் வாழும்
இழிவான வாழ்க்கையினை
இன்னும் புரியாமல்
இருக்கின்ருய்?

கோபாலா!
கொடுமைகளைக்கொல்ல
எடு சக்கரம்!
ஈழத்தில் அவதரித்து,
எங்கள் துயர்களை
வேளைக்கே விலக்கிவிடு!
இல்லையென்ருல்...
நாளைக்கே நாங்கள்
நெடுமாலாய் மாறி
நரகாசுரர்களை
பாடையிலே ஏற்றி
வெற்றிப் பரணிபாடி
விழாவெடுப்போம்!

—செ. குணரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் விட்டகலாத இரண்டு நிகழ்ச்சிகள்!

அன்பு நண்பா,

பால் வடியும் முகம்; மாசற்ற மனத்தினைக் காட்டிடும் வாய் நிறைந்த சிரிப்பு; அரும்புகின்ற புது மீசை; அப்பழுக்கற்ற இளமைத் தோற்றம்; அச்சம் என்பதே இன்னதென்று அறிந்திடாத ஆண்மைப் பார்வை; வயது இருபதுக்குள்தானிருக்கும்; இனிய நினைவுகள் பலப் பல இதயத்துள் எழுந்திடும் பருவத்தினன்; கட்டிளங் காளை!!

எந்த இலக்கியம் வர்ணித்திடும் கதாநாயகனை இப்படிக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறாய்? அல்லது எந்த வரலாற்று நாயகனை இப்படி வர்ணனை செய்கிறாய்? என்றெல்லாம் உன் உள்ளம் கேள்விக்குறிகளை என்னை நோக்கி எழுப்பிடுகிறது; இல்லையா நண்பா?

கற்பனையுமல்ல; காவியமுமல்ல; வர்ணனையுமல்ல; வார்த்தையலங்காரமும் அல்ல; தமிழ் ஈழத்தின் விடுதலை வரலாற்றைப் படைத்து வருகின்ற—புதிய புறநானூற்றை எழுதிவருகின்ற—ஒரு தியாக வீரர்களில் ஒருவரை சில நாட்களுக்கு முன்னர்நான் சந்தித்தபோது—என்நெஞ்சில் நிறைந்த எண்ணங்களையே எழுத்தில் மேலே வடித்திருக்கிறேன்!

மீன்பாடும் தேனாட்டின் மானத் தமிழ் வீரர்களின் வரிசையிலே—இளம் பரிதிபோல் எழுந்த இளைய தலைமுறையினரில் இவனும் ஒருவன் என்று சொல்லக்கேட்டிருக்கிறேன்; அண்ணா, அண்ணா என்று அவன் ஆசையோடு எனக்குப் பல மடல்களை எழுதியபோதெல்லாம் அவற்றைப் படித்து—அந்தத் தம்பியின் விடுதலை ஆவேசத்தையும், செயலூக்கத்தையும் கண்டு இதயம் பூரித்திருக்கிறேன்; சுறுசுறுப்புடன் செயற்பட்டு, தமிழ் விடுதலை இயக்கக் கருத்துக்களை கிழக்கிலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் எடுத்துச் சென்று அவன் தூவியபோது — உணர்ச்சிக்கவிஞரை உள்ளே பூட்டி வைத்திடினும், அவர் ஏற்றுக்கொண்ட இயக்க பணியை வேகமுடன் செயற்படுத்தும் தமிழ் இளைஞர் படையொன்று மட்டுமாநகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உருவாகி வருகிறதை உணர்ந்து உள்ளம் நிறைந்திருக்கிறேன்! அத்தகைய அருமைத் தம்பியை—முதன்முதலாக சிறைச்சாலையிலேயே சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய ஒரு சூழ்நிலை உருவாகுமென்று நான் கனவுகூடக் கண்டதில்லை!

ஆம், நண்பா, மட்டக்களப்பு—அம்பாறை மாவட்ட தமிழ இளைஞர் பேரவையின் செயலாளரான தம்பி நடேசானந்தம் அவர்களை சென்ற அக்டோபர் 30ம் நாள் கொழும்பு புதுக்கடை சிறைச்சாலையில் அவரது தாயாருடன் சென்று நான் சந்தித்தபோது—முதன்முதலாக சிறைக்குள்ளே அவரைச் சந்திக்க நேர்ந்ததே என்பதை எண்ணிய நேரத்தில் என் கண்கள் பனித்தாலும்—அது ஆனந்தக் கண்ணீரா பாசத்துயரத்தின் கண்ணீரா என்று என்னால் கூறிடமுடியவில்லை!

தம்பி நடேசானந்தத்தின் துணிச்சலான தியாகத்தையும்—தமிழ் சமுதாயத்துக்காக இன்னல்களையும் அடி உதைகளையும் சித்திரவதைகளையும் தாங்கியும் கொஞ்சமும் கலக்கமின்றி காணப்பட்ட அவனது சிரித்த முகத்தையும் கண்ணுற்றபோது—ஒரு கணம் உடம்பெல்லாம் சிலிர்த்திட, உவகைக் கண்ணீர் சிந்திடினும், மறுகணம்—அம்புபோல ஆடியோடி, படித்துக்கொண்டிருக்க வேண்டிய இந்தப் பச்சைப்பிள்ளைக்கா இந்தக்கதியென்று எண்ணினேன்; இதயம் கலங்கினேன்!

**நான் இதயம் கலங்கினேனே தவிர—தம்பி நடேசானந்தமோ இளநகை காட்டிச் சிரித்தபடி காட்சிதந்தான்! நான் இரும்புக் கதவுகளுக்குள் அடைக்கப்பட்ட இந்தச் சின்னச் சிறைக்குள் இருக்கிறேன்; நீங்களோ இதைவிடப் பெரிய சிங்கள ஏகாதிபத்தியமெனும் அடிமைச் சிறைக்குள் அடைப்பட்டு கிடக்கின்றீர்கள்; ஆக இருவருமே சிறைக்குள்தானே இருக்கிறோம்; இதில் உங்களுக்கும் எனக்கும் ஏது வித்தியாசம்? என்று கேட்பதுபோலிருந்தது அவன் பார்வை!**

தம்பி நடேசானந்தனின் தந்தையார் பூபாலரத்தினமும் தாயாரும் — இருவருமே தமிழ்ப்பற்றும், தன்மான உணர்வும் நிரம்பப் பெற்றவர்கள்; கோட்டைக்கல்லாறு மாவித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றுபவர் திரு. பூபாலரத்தினம்! தாயாரும் ஓர் ஆசிரியை இத்தகைய பண்புமிக்க — தமிழ் ஆர்வம் நிறைந்த அடக்கமும் அமைதியும் அறிவும் நிறைந்தகுடும்பத்தில் பிறந்தவர் தம்பி நடேசானந்தம்! இவர் மீதுதான் "யாழ்ப்பாண ஜாலியன்வாலாபாக்" புகழ் சந்திரசேகராவின் ஜீப்புக்கு குண்டு வீசியதாக பொலிசாருக்கு சந்தேகமாம்!

**கொழும்பில் இதுசம்பந்தமாக கடைசியாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போதுகூட—திரு. சந்திரசேகரா, நடேசானந்தத்தை சரியாக சுட்டிக் காட்டி—தெளிவாக அடையாளம் காட்டவில்லையாம்; சந்தேகமானதொனியில், "I Think He is The Person" ("அவராகத்தான் இருப்பாரென்று நான் நினைக்கிறேன்") என்று கூறினாரே தவிர "இவர்தான் ஆள்" என்று திட்டவட்டமாக கூறவில்லை; அப்படியிருந்தும், தம்பி நடேசானந்தத்தை விடுதலை செய்யமனமின்றி—அவரை வேறு ஏதாவது சிக்கலில் மாட்ட முடியாதா என்று அலைந்துதிரிகின்றன வேட்டைநாய்கள்!**

"எங்கள் மகன் கொள்ளையடித்தோ—கொலைசெய்தோ—வேறு கொடுமைகள் புரிந்தோ சிறைக்கு செல்லவில்லை; தமிழுக்காக—தமிழ் இனத்தின் உரிமைக்காக தந்தை செல்வா காட்டும் அறப்போர் வழியில் செயல்பட்டு வந்த அவனை ஆட்சியாளர்கள் பிடித்து சிறைக்குள் தள்ளிவிட்டனர்! தமிழுக்காகத்தானே அவன் சிறை சென்றிருக்கிறான்! அது எங்களுக்கு பெருமைதானே தவிர சிறுமை இல்லை! காந்தியும், நேருஜியும், ராஜாஜியும், அண்ணாவும், தந்தை செல்வாவும் சிறைக்குச் சென்றவர்கள்தானே! உரிமைக்குப்போராடுபவர்கள் சிறைக்குச் செல்லத்தான் வேண்டும்; இன்னல்களை ஏற்கத்தான்வேண்டும்! கடந்த கால் நூற்றாண்டுகாலமாக நாங்கள் தந்தை செல்வாவின் தமிழ் ஈழ விடுதலைப் படையை ஆதரிப்பவர்களாகவே இருந்து வருகிறோம்; ஆனால் நாங்களோ ஆறுதல் (SLOW) பஸ்ஸில் பயணம் செய்துவந்தோம்; மகனோ கடுகதி (EXPRESS) பஸ்ஸில் ஏறிவிட்டான்! அதுதான் வித்தியாசம்! மற்றப்படி எங்கள் உணர்வுகளை எங்கள் பிள்ளையிலும் இன்று எதிரொலிப்பதைக் கண்டு ஆனந்தம் அடைகிறோம்! எங்கள் மகன் முழுக்க முழுக்க அஹிம்சைப் போராட்டத்தை ஆதரிப்பவனே தவிர—அவன் வன்முறையை நினைத்துக்கூடப்பார்ப்பவனல்ல! நடேசானந்தனுக்கும் சிறையிலுள்ள ஏனைய தமிழ் இளைஞர்களுக்கும் எதிராக அரசு எத்தனை அநியாயமான குற்றச்சாட்டுக்களை சுமத்த முற்படினும்—இறுதியில் நீதிவெல்லும் தர்மம்வெல்லும் என்பதிலே எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு!"

இவ்வாறு நடேசானந்தத்தின் தாயும் தந்தையும் என்னிடம் கூறியபோது—மகனைச் சிறைக்கு அனுப்பினாலும் தமிழ் மானத்தை இழக்காத அந்த வீரநெஞ்சங்களை என்மனம் வீழ்ந்து வணங்கியது!

அக்டோபர் முப்பதாம் நாள் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடி சிறையிலிருக்கும் சிங்கத் தமிழ் மகன் நடேசானந்தனைச் சிறைச்சாலையில் சென்று பார்த்தேன்; அக்டோபர் 31ம் நாளோ மற்றோர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி அதிலேயே தன்னுயிரை அர்ப்பணித்த மாவீரன் ஒருவனுடைய நினைவு நாளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது!

## அரசியல் மேடை

ஆம் நண்பா—அக்டோபர் 31 தமிழ் ஈழத்தின் கடைசித் தமிழ் இராச்சியம் வீழ்ச்சியடைந்த நாள்! ஈழத் தமிழினம் அடிமை இனமல்ல—ஈழத்தை ஆண்டபரம்பரை என்பதை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கும் நாள்! ஈழத் தமிழினம் எந்த ஏகாதிபத்தியத்துக்கும் அடிமையாக வாழாது; எதிர்த்துப்போராடியே தீரும் என்பதை அகிலத்துக்கும் அறிவித்துக் கொண்டிருக்கும் நாள்! அந்த நாளிலேதான்—1803ம் ஆண்டு—ஏறத்தாழ 170 ஆண்டுகளுக்கு முன்பு-வன்னித் தமிழ் இராச்சியத்தின் கடைசி மன்னன்—மாவீரன் பண்டாரவன்னியன் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்து—அப்போரிலே துரோகியொருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டு வீழ்ச்சியடைந்தான்! அத்தகைய வீரத்திருமகனுக்கு முள்ளியவளையிலே விழா எடுத்தார்கள் நம் அணியைச்சேர்ந்த துடிப்புமிகு இளைஞர்கள்! இந்த விழாவினில் நீங்களும் ஈழவேந்தனும் கலந்துகொள்ளத்தான் வேண்டும் என்று அவர்கள் எனக்கும் அவருக்கும் அன்புக்கட்டளை பிறப்பித்திருந்தார்கள்! தம்பிகள் தவராசனும், இந்திரநாதனும், கடிதத்துக்குமேல் கடிதம் எழுதினார்கள்—தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டார்கள் — இவர்களது அன்புக் கட்டளைகளை என்னால் எப்படி மீறிட முடியும்?

முள்ளியவளையில் — தமிழினத்துக்கு கொள்ளிவைத்துள்ள குடியரசு அரசியல் சட்டத்துக்கு எதிராகசென்றமே 22ல் பகிஷ்கரிப்பு இயக்கங்களில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின்பேரில்பொலிசாரினால் தேடித்திரியப்பட்டவர்; எஃகுநெஞ்சினர்; தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அசையாத வீரர்களில் ஒருவர்— தம்பி தவராசன்! தம்பி இந்திரநாதனோ—யோகலிங்கம், இராசரத்தினம், ஆகிய வேறு இரு தமிழ் இளைஞர்களுடன் [illegible] நான்கு திங்கள் சிறைத்துன்பத்தை அனுபவித்தவர்! [illegible] இந்திரநாதனின் [illegible] பாதியை பொலிசார் பிய்த்து பிடுங்கி எடுத்துக்கொண்டார்களாம்; அவரது இலட்சிய ஆழத்தைக் கண்டறிவதற்கு பொலிசாரின் குண்டாந்தடிகள் அவர் நெஞ்சைப் பதம் பாரத்தனவாம்; பொலிசாரின் குண்டாந்தடிக்குக்கூட—தம்பி இந்திரநாதன் தன்னுடைய நெஞ்சைக் கொடுத்தாரே தவிர முதுகைக்கொடுத்திடவில்லை! போரில் முதுகு காட்டும் பண்பு தமிழனுடைய இரத்தத்தில் ஊறியதல்லவே!! சிறையிலிருந்து வெளியே வந்தாலும்—சிறைச்சாலையில் இருக்கும்போது அங்குள்ள சுகாதாரக் குறைகளினால் பாதிக்கப்பட்டு—இன்றைக்கு அந்த இளைஞர்களின் மேனிகளில் ஒருவகை கறுப்பு புள்ளிகள்படரத்தொடங்கியிருக்கின்றதையும் கண்டேன்!

இப்படி பல்வேறு துன்பங்களுக்கும் தங்களைப் பலியாக்கிக்கொண்ட போதிலும்—கொஞ்சமும் களைப்படையாது சலிக்காது—அந்தத்தோழர்கள் பண்டாரவன்னியனுக்கு விழா எடுப்பதன் மூலம், தமிழ் ஈழ விடுதலை உணர்வை வளர்த்திட ஊக்கமுடன் செயல்படும் போது— அந்த தம்பிகளின் அன்பழைப்பை எப்படி நிராகரித்திட முடியும்?

மான்குளம் புகையிரத நிலையத்தில் இறங்கி—முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் பேருந்து வண்டியில் ஏறி முள்ளியவளையை நோக்கி, இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக நான் சென்றுகொண்டிருந்தபோது — வழிநெடுகக் காணப்பட்ட வன்னித்திருநாட்டின் இயற்கை எழில் என்னுள்ளத்தை கொள்ளைகொண்டது; அதன் எழிலில் சொக்கிவிட்டேன் நண்பா!

களிறும்பிடியும், கலையும் மானும், கரடியும் சிறுத்தையும்தேக்கும்தேனும்காணப்படுகின்ற அடவிகள் நிறைந்த அந்தப் பிரதேசத்தில் முல்லையும் மருதமும் கைகோர்த்து கலந்து உறவாடிடும் காட்சியின் அழகுதான் என்னென்பேன்! வீதிகளின் இருமருங்கிலும் வரிசையாய் வான் முட்ட வளர்ந்து நிழல் பரப்பி நின்றிடும் நீண்ட பாரிய தருக்கள்; அத்தருக்களின் மீதமர்ந்து கீதம் இசைத்திடும் குருவிகள், பறவைகள்; ஆங்காங்கு காணப்பட்ட குளம் குட்டைகளில் ஒற்றைக்காலில் இருந்து இரைதேடி தவம்புரியும் கொக்குகள்—நாரைகள்!! இப்படி—இயற்கை எழில் பூத்துக்குலுங்கிடும் தமிழ் ஈழத்தின இத்தகைய இனிமையான காட்சிகள் என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டிடினும் — நாம் ஆட்சிசெலுத்திய இந்தத் தமிழ்ப் பூமியின் ஆட்சி இன்றையதினம் நம் இனத்தின் கைகளில் இல்லையே; சிங்கள ஏகாதிபத்தியத்தின் கைகளில் அல்லவா அது இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தபோது — தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இன்னும் வேகம் பெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தேன்!

முள்ளியவளையில் நடைபெற்ற பண்டாரவன்னியன் விழாவில் கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி, அடலேறு ஆலாலசுந்தரம், ஈழவேந்தன் ஆகியோருடன் நானும் உரையாற்றினேன். தமிழுணர்ச்சி மிகுந்தவரான முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அதிபர் திரு. மு. சிவானந்தன் அவர்களும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். வித்தியானந்தக் கல்லூரி மாணவர் பேரவைத் தலைவர் தம்பி கனகையனின் உரையில் தமிழ் விடுதலை உணர்வும் வேகமும வீரமும் நிறைந்து காணப்பட்டதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சிகொண்டேன்!

"பண்டார வன்னியனின் விழா—விழா முடிந்ததும் அது பற்றி மறந்து விடும் ஒரு விழாவல்ல! தமிழன் இந்நாட்டை ஆண்டபரம்பரை என்கிற இந்தவரலாற்று உணர்ச்சியை நமக்கெல்லாம் தந்து—தமிழ் ஈழத்தை மீண்டும் தமிழனே ஆளுகின்ற நிலையைக் கண்டிடும் நமது விடுதலைப் போராட்டத்தை தூண்டிவிட்டுக்கொண்டிருக்கும் ஒரு விழா! அந்நிய ஆங்கில ஏகாதிபத்தியத்தை மட்டுமல்ல—உள்நாட்டு சிங்கள ஏகாதிபத்தியத்தையும் தமிழர்கள் எதிர்த்துப் போராடுவார்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் விழா! ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள உறுதி பூணும் விழா! இந்த விழாவில் பண்டார வன்னியனின் வீரத்தின் மீது ஆணையிட்டு அந்த உறுதியை எடுப்போமாக!

—இவ்வாறு, நான் அந்தக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டேன்!

நண்பா, பண்டார வன்னியன் விழாவுக்கு என்னை அழைத்த முள்ளியவளை நண்பர்கள்—என் மீது கொட்டிய பரிவும் பாசமும் அளித்த அன்பு விருந்தும் என்றுமே என்னால் மறக்க முடியாதது. அவர்களின் அன்பு வெள்ளத்தில் நான் திக்குமுக்காடிப்போனேன்! தன்மானத் தமிழ் வேந்தன் பண்டார வன்னியனின் விழாவில் என்னைக் கலந்துகொள்ள வைத்த அந்த தங்கத் தம்பிகள் என் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டனர்!

ஆம்,—அக்டோபர் 30ம் நாள் தம்பி நடேசானந்தத்தை சந்தித்த நிகழ்ச்சியும் முள்ளியவளையில் பண்டார வன்னியன் விழா நடைபெற்ற அக்டோபர் 31ம் நாள் நான் கலந்துகொண்ட நிகழ்ச்சியும்—இதயம் நிறைந்த நிகழ்ச்சிகள் என்று கூறிடின் அது மிகையல்ல!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வரவுசெலவுத் திட்டம்

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் "சம்பிரதாய பூர்வமாக" தேசிய அரசுப்பேரவையில் நிதியமைச்சரினல் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

இந்நாட்டைப் பொறுத்தவரை — வரவுசெலவுத் திட்டம் என்பது அதிமுக்கியத்துவம் உடையதாகக் கௌரவிக்கப்பட்ட காலம் மறைந்து—இன்றைய ஆட்சி வந்த பின்னர் இப்போது அது வெறும் ஒரு சம்பிரதாயமாக மட்டுமே இருந்து வருகிறது.

ஏனெனில் வரவுசெலவுத் திட்டங்களில் எதுவும் குறிப்பிடப்படாமலே—திடீர் திடீரென்று நள்ளிரவு 'கெசட்'டுகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை வாசிகளை உயர்த்தியும், பங்கீட்டுக்கு வழங்கும் பொருட்களின் அளவைக் குறைத்தும் இந்நாட்டு மக்களின் வயிற்றில் இந்த அரசு அடித்துவருவது வழமையான காரியமாகிவிட்டது!

எனவேதான் வரவுசெலவுத்திட்டம் என்பது இந்நாட்டைப்பொறுத்தளவில் கேலிக்குரிய ஒரு பொருளாகி விட்டது.

நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள புதிய வரவுசெலவுத் திட்டத்தில், விலை வாசிகளின் எக்கச் சக்கமான உயர்வாலும், அத்தியாவசிய உணவுப்பொருட்களின் கட்டுப்பாட்டாலும் தட்டுப் பாட்டாலும், துடிதுடித்து—வாழ்க்கையே ஒரு பாரமாகி—அனுதினமும் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டிருக்கும் இந்நாட்டிலுள்ள ஏழைப் பாட்டாளி மக்களுக்கு கிஞ்சிற்றுத்தானும் எதுவித நிவாரணமும் அளிக்கப்படவில்லை!

அதே நேரத்தில் புதிய வரவுசெலவுத்திட்டம் ஏழை மக்கள் மீது புதிய பழுவை ஏற்றவில்லையென்று சிலர் திருப்தியடைகிருர்கள்!

இவர்களுக்கு நாம் இரண்டு விஷயங்களைச் சுட்டிக் காட்டவிரும்புகிறேம்!

ஒன்று—ஏழை மக்கள் மீது மேற்கொண்டு புதிதாக பளுவெதையும் சுமத்தமுடியாத அளவில் — அவர்கள் மீது ஏற்கெனவே தலைநிமிர்த்த முடியாத அளவு சுமை ஏற்றப்பட்டுவிட்டது!

இரண்டாவதாக — அவசரகாலச் சட்டம் இன்னும் இருக்கவே இருக்கிறது; 'கெசட்' இருக்கிறது; நள்ளிரவில் அதில் கையெழுத்துப்போடுவதற்கு அமைச்சர்கள்பேனவும் கையுமாகத் தயாராக காத்து இருக்கிருர்கள்!

இந்நிலையில் மக்களின் தலைமீது பாருங்கல்லைத் தூக்கிப்போடும் எந்தக் 'கெசட்' எப்போது வருகிறதோ யார் கண்டார்கள்?

உடுவில் பா. உ. கருத்துத்தெரிவித்திருப்பதைப்போல—ஒருவேளை கலாவேவ இடைத்தேர்தல் நவம்பர் 27ல் நடந்துமுடிந்த பின்னர்—இந்த கெசட் அறிவித்தல்கள் வந்தாலும் வரலாம்!

விலைவாசி உயர்வு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, கட்டுப்பாடு, சம்பளம் பற்ருமை—போன்ற பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் சிக்கி தவித்துக் கதறும் இந்நாட்டு ஏழை மக்கள், அதிலிருந்து மீட்சி பெறுவதற்கு ஒரு துரும்பைத்தானும் புதிய வரவுசெலவுத் திட்டம் அவர்களுக்கு அளிக்கத் தவறி விட்டது!

## ஒரு புதிய குரல்!

தேசிய ஒற்றுமை—ஒருமைப்பாடு—விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை — நல்லெண்ணம் — என்பனபோன்ற மாயாஜால வார்த்தைகளை தமிழ் மக்கள் மத்தியில் செல்லும் போது மட்டும் இன்றைய அமைச்சர்களும், சிங்கள அரசியல் தலைவர்களும் அள்ளி இறைப்பது வழக்கம்! இத்தகைய பிரசாரத்தை சிங்களமக்கள் மத்தியில் செய்வதற்கு இவர்கள் முன்வருவதில்லை!

ஏதோ தமிழ் மக்கள்தாம் தேசிய ஒற்றுமைக்கும் இன சௌஜன்யத்திற்கும் முட்டுக் கட்டையாக இருந்து வருகிருர்கள் என்பதுபோல இவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டுமே இத்தகைய 'இதோபதேசம்' செய்வதை தங்கள் "மாபெரும் கடமை"யாக கருதி தவருது அதைச் செய்து வருகிருர்கள்!

1956ம் ஆண்டிலிருந்து இந்நாட்டுப்பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களிடையே தமிழ் மக்களுக்கும் தமிழ் இனத்துக்கும் தமிழ் மொழிக்கும் எதிராக பச்சை இனத்துவேஷத்தை—விரோதத்தை- தீவிரமாக விதைத்து—அதன் பயனக "அதிகார அறுவடையை" செய்துவந்திருக்கின்றன—சிங்களப்பகுதியிலுள்ள இரண்டு சிங்கள அரசியற் கட்சிகளும்!

இதுகாலவரை—சிங்கள மக்களே! தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளை விட்டுக்கொடுங்கள்! அவர்களது உரிமைகளை வழங்க தடையாக இராதீர்கள்—என்று இந்தச் சிங்களக்கட்சிகளைச்சேர்ந்த எந்த ஒரு சிங்கள அரசியல் தலைவரும் சிங்கள மக்களுக்கு வேண்டுகோள் விடுத்ததாக நாம் கேள்விப்படவில்லை!

மாருக — ஒரு கட்சி தமிழ் மக்களுக்கு ஏதாவது உரிமைகளை வழங்க முன்வரும்போது இரண்டாவது கட்சி அதை எதிர்த்தது! இரண்டாவது கட்சி வழங்க முன்வரும் போது முதலாவது கட்சி எதிர்த்தது—இது கடந்தகால வரலாறு!

ஆனல் இப்போது முதன் முதலாக இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட குரல் ஒன்று சிங்கள மக்களிடையே எழுந்திருப்பது கேட்டு மகிழ்ச்சியடைகிறேம்!

# 'ஈழநாடே வாயை மூடு!

## இன விடுதலைக்கு குரல் கொடுப்போரின் முதுகில் குத்தி துரோகியாகாதே!

1961ம் ஆண்டு தமிழ் ஈழம் முழுவதும் இரண்டு மாதகாலமாக நடைபெற்ற மாபெரும் அறப்போராட்டம் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் மறக்க முடியாத ஒரு கால கட்டமாகும்!

அந்த அறப்போராட்ட நேரத்தில் தமிழ் சமுதாயத்தின் மத்தியில் ஏற்பட்ட தீவிர தமிழுணர்ச்சியை பயன்படுத்தி, தமிழ் மக்கள் மத்தியிலே தலையெடுத்தது ஒருநாளேடு. அதன் பெயரே 'ஈழநாடு'!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு பத்திரிகையாக — அதுவும் தமிழர்களாலேயே நடத்தப்படும் பத்திரிகையாக 'ஈழநாடு'இருப்பதால் தமிழ் மக்கள் அந்தப் பத்திரிகையை ஆதரிக்கத்தொடங்கினர்!

ஆனல் — அண்மைக்காலமாக இந்தப் பத்திரிகை தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மூடிமறைத்து — தமிழ் இனத்தின் எதிரிகளின் ஊதுகுழலாக — எட்டப்பர்களினதும் இனத்துரோகிகளினதும் எடுபிடியாக இயங்கத் தொடங்கியிருப்பதை நாம் கவனித்துவருகிறேம்!

ஆடிக்காற்றில் அள்ளுண்டு வரும் குப்பைகள் போல—ஐக்கிய முன்னணிக்கட்சிகள் ஆட்சி பீடமேறியதும் அதில் பிடித்துத் தொங்கிக் கொண்டு தமிழ் ஈழத்தில் நாற்றமெடுக்கும் அரசியல் நடாத்திவரும் நாதியற்றதுகளுக்கெல்லாம் ஈழநாடு இப்போது எக்கச்சக்கமான விளம்பரம் நாள்தோறும் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

அரசாங்க ஆதரவு ஏடான 'ஜனவேகம்' அண்மையில் குறிப்பிட்டதுபோல சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஊழல் குப்பையில் கிடந்து விட்டு இன்று புதிதாக நீலச்சட்டையையும் சிவப்புச் சட்டையையும் மாட்டிக்கொண்டு தமிழ் ஈழத்தில் காட்டுதர்பார் நடத்திவரும் விலாங்குப் பிறவிகளுக்கு விளம்பரம் தரும் பத்திரிகையாக ஈழநாடு மாறியிருப்பது கண்டு தமிழ் மக்கள் விசனமடைகிருர்கள்!

பிரதமர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது — பிரதமரையும், ஆளுங்கட்சியின் எடுபிடிகளையும் திருப்திப்படுத்துவதற்காக — பகிஷ்கரிப்பையும் எதிர்ப்பையும் மட்டம்தட்டுவதுபோல பல்வேறு பொய்ச் செய்திகளை 'ஈழநாடு' வெளியிட்டதை தமிழ் மக்கள் இன்னும் மறக்கவில்லை!

• தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு எதிராக ஆரம்ப நேரத்தில் அது கச்சைகட்டிக் கொண்டு நின்றதையும் இன்னும் மறக்கவில்லை!

துரோகப்பரின் "சின்ன எசமான்" ஆன அனுரா பண்டாரநாயகாவை "எம். பி. ஆக்கிப்பார்க்கவும் ஆசைப்பட்டது இதே ஈழநாடு தான்!

இவ்வாறு மிகவும் கேவலமான முறையில் மட்டமான ஆசாமிகளுக்கு எல்லாம் தாளம்போட்டு துதிபாடி—அடிதொழுது தெண்டனிட்டு—அடிமைச் சேவகம் புரியத் தொடங்கியிருக்கும் 'ஈழநாடு' தமிழ் மக்களின் வெறுப்புக்கும் விரக்திக்கும் ஆளாகிவருகிறது.

இப்போது — போதாக் குறைக்கு — உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனர்த்தனம் அவர்களைப்பற்றியும் அவசியமற்ற முறையில் எழுதி தமிழ் இளைஞர்களின் கடுமையான எதிர்ப்பை 'ஈழநாடு' சம்பாதித்துக்கொண்டிருக்கிறது.

ஈழத் தமிழ் மக்களுக்காக சென்னையில் டாக்டர் இரா. சனர்த்தனமும்ஏனையோரும் எழுப்பிவரும் குரலுக்கு—எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு—ஈழத் தமிழர் சமுதாயம் முழுவதும் நன்றி பாராட்டும் நேரத்தில் ஈழநாடு மட்டும் அதற்கு மாசு கற்பித்து நாய்போல குலைத்திருக்கிறது.

தானுடாவிட்டாலும் தன் தசையாடும் என்பார்கள். அதுபோலவே டாக்டர் சனர்த்தனம்,கண்ணதாசன், மதுரை முத்து, மணவைத் தம்பி, போன்ருேரும், மற்றும் தி.மு.க, அ.தி.மு.க. போன்ற தமிழக கட்சிகளும் ஈழத் தமிழர்களுக்காக அங்கிருந்து குரல் கொடுக்கும் போது — நன்றிகெட்டதனமாக அவர்களுக்கு மாசு கற்பிக்கிறது ஈழநாடு.

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைபற்றி பேசுவதால்—ஈழத் தமிழர்களுக்காக வாதாடுவதால் — நடவடிக்கைகள் மேற்கொள்வதால்—சனர்த்தனம் அவர்கள் அடையும் தொல்லைகள்—பொருளாதார இழப்புக்கள் ஏராளம். ஈழத்தமிழர் பிரச்சினையில் அவர் தீவிர அக்கறை காட்டுவதைத் தவிர்த்திருந்தால் சிலவேளைகளில் இதுவரை அவருக்கு எம். பி. பதவியோ வேறு பதவிகளோ கிட்டியிருக்கக் கூடும்!

அப்படியிருக்கும் போது வெந்ததைத்தின்று வாயில் வந்ததை எழுதும் 'ஈழநாடு' பிறவிகள்—பதவியைப்பிடிப்பதற்காகவே சனர்த்தனம் ஈழத் தமிழர்கள் பிரச்சினையைப் பயன்படுத்துகின்ருர் என்று துடுக்குத்தனமாக எழுதியுள்ளதானது — ஈழத் தமிழன் நன்றிகெட்டவன் என்பதையே எடுத்துக்காட்டும் என்பதோடு, இனிமேல் ஈழத் தமிழனுக்காக குரல் கொடுக்க—போராட வேறு எவனையுமே முன்வராமல் தடுத்துவிடவும் கூடும்!

சிண்டுமுடியும் வேலைகளை 'ஈழநாடு' வேண்டுமானல் இங்கேயே வைத்துக் கொள்ளட்டும். தமிழகத்தில் சனர்த்தனத்துக்கும், மணவைத்தம்பிக்கும் சிண்டு முடியும் வேலையில் அது கேவலமாக இறங்கியிருக்க வேண்டாம்!

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது ஒன்பது தமிழ் உயிர்கள் பலியானதற்கு சனர்த்தனமே காரணம் என்றதோரணையில் ஈழநாட்டில் எழுதியவர் உண்மையில் நிறைவெறியில்தான் அவ்வாறு எழுதியிருப்பார்! சுய நினைவில் இருந்திருந்தால்—சிங்கள ஆட்சியாளர்களின் ஏவல் நாய்களான பொலிசார் மிருகவெறிபிடித்து தமிழுயிர்களைத் துவம்சம் செய்ததற்கு— சனர்த்தனத்தின் மீது பழிபோட்டிருக்க மாட்டார்!

சிங்கள வெறியர்களைக் கண்டித்து எழுதுவதற்கு பேனவைத் தூக்குவதற்கு தொடை நடுங்கும் 'ஈழநாடு' எழுத்தாளர்கள் — அப்பாவி சனர்த்தனம் மீதுவசைபாட முற்பட்டிருக்கிருர்கள்!

'ஈழநாடு' பத்திரிகைக்கு நாம் கூறுகிறேம் — நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருங்கள்! புலியை இடறுவது போல தமிழுணர்ச்சி கொண்ட இளைஞர்களின் உள்ளங்களை இடருதீர்கள். தமிழ் இளைஞர்களின் ஆத்திரம் உங்கள் பக்கம் திரும்பினல்—அது எங்குபோய் முடியுமோ எங்களுக்குத் தெரியாது. தமிழ் மக்களே! ஈழநாடு பத்திரிகையை வாங்காதீர்கள் என்று தமிழ் விடுதலை இயக்கத்தினர் வேண்டுகோள் விடுப்பார்களேயானல் — நாளையே உங்கள் கடையை இழுத்து மூடவேண்டி வருமென்பதை மறந்துவிடாதீர்கள்! அந்த நிலையை நீங்களாகவே உருவாக்காதீர்கள்!

திரு. சனர்த்தனம் அவர்கட்கும் — வெளிநாடுகளில் தமிழ் ஈழ விடுதலைக்காக குரல் கொடுக்கும் ஏனையோருக்கும் கூறுகிறேம் — இங்குள்ள சிங்கள ஆட்சி போடுகின்ற எச்சில் இலை நக்கும் எட்டப்பத் துரோகிகளுக்கு துதிபாடி அடிவருடும் 'ஈழநாடு' போன்ற பத்திரிகைகளின் கருத்துக்களை ஈழத்

5-ம் பக்கம் பார்க்க

ஆம், குமார் ரூபசிங்கா அவர்கள்தான் இத்தகைய ஒரு புதிய குரலை சிங்கள மக்கள் மத்தியில் துணிச்சலாக எழுப்பியிருக்கிருர்!

பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்துக்கு விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும்" (வீரகேசரி 5-11-74)

என்று அவர் தெஹியோவத்தையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது முதன்முதலாக குரல் கொடுத்திருக்கிருர்!

திரு. குமார் ரூபசிங்க அவர்கள் சிங்கள மக்களுக்கு விடுத்திருக்கும் இந்த அழைப்பிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது—அதாவது தமிழ் மக்களின் உரிமைகளை சிங்கள மக்கள் இன்று விட்டுக்கொடுக்க மறுக்கிருர்கள் என்ற உண்மைதான் அது.

இதே நேரத்தில்—யாழ்ப்பாணம் சென்றிருந்த குமார் ரூபசிங்காவின் மாமியாரான பிரதமர் அவர்களோ, சிங்கள மக்கள் மத்தியில் இன்று அணுவளவும் வகுப்புவாதம் கிடையாது என்று பேசியிருப்பது வேடிக்கையானது!

தமிழ்மக்களின் நியாயபூர்வமானமொழி,இன,கலாசார ஆட்சிஉரிமைகளையும்சலுகைகளையும் அரசியல்சட்டரீதியாக ஒப்புக்கொள்வதற்கு சிங்கள மக்கள் மறுப்பதன் காரணமாகத்தான்—இன்றைக்கு தமிழினம் நாட்டுப் பிரிவினையை நோக்கித் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது! இந்த உண்மையை குமார் ரூபசிங்க போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்!

திரு. குமார் ரூபசிங்க அவர்கள் தமிழ்மக்களின் உரிமைகளை அரசியல் சட்டரீதியாக வழங்கவேண்டும்—விட்டுக்கொடுக்கவேண்டும்— என்கிற மனப்பான்மையை சிங்கள மக்களுக்கு மத்தியில் மட்டுமல்ல—தான் சார்ந்துள்ள சிறீ [illegible] புகுத்துவதில் வெற்றி பெறுவாரானல்—எம்மைவிட மகிழ்ச்சியடையவர்கள் வேறுயாரும் இருக்கமுடியாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமாவோவை வடக்கில் வரவேற்றவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட சிங்கள மக்களே!

## சமசமாசி விசுவநாதனுக்கு தொழிற்சங்க செயலாளர் சவால்!

இலங்கை சமசமாசக்கட்சியின் யாழ்ப்பாணக்கிளை செயலாளரான திரு. அ. விசுவநாதனின் பத்திரிகை அறிக்கைக்குப் பதிலளித்து தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி செயலாளர் இ. பேரின்பநாயகம் சுதந்திரனுக்கு விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் கூறியிருப்பதாவது:—

இந்த நாட்டில் வாழும் 35இலட்சத்திற்குமேற்பட்ட தன்மானமுள்ள தமிழ் மக்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களின் ஒரு பகுதியினரும் நேராகவும், ஆதார பூர்வமாகவும் அறிந்துகொண்ட உண்மையை மூடிமறைக்க முயல்வதன் மூலம் திரு. விசுவநாதன் அவர்கள் முழுப் பூசினிக்காயைச் சோற்றில் புதைக்க முயல்கின்ருர். தன்னை யாழ்ப்பாணத்தில் வரவேற்பதற்கு தென்னிலங்கையிலிருந்து பெருந்தொகையான மக்கள் வந்திருந்தார்கள் என்பதை மாண்புமிகு பிரதமர் அவர்களே பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியதும், சிங்களமொழியில் ஆரம்ப உரையை தமிழ் மண்ணில் நிகழ்த்தியதன் மூலம் நிரூபித்திருந்தார்கள்.

இதைத்தவிர அன்றைய தினம் செய்திகளை வெளியிட்ட தேசியப்பத்திரிகைகள் பல, "தெற்கிலிருந்து வந்த சிங்கள மக்களும் பிரதமரை வரவேற்ருர்கள்" என்று குறிப்பிட்டன. சிறீலங்கா சுதந்திரக்கட்சி தொழிற் சங்க சம்மேளன செயலாளரான ஜனுப் அளவி மௌலானு அவர்களின் தலைமையில் 10 ஆயிரம் சிங்களத் தொழிலாளர்கள் கலந்துகொண்டதும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் வாலிப இயக்கங்கள் நாட்டின் பலபாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகளை அனுப்பி வைத்ததையும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும், சமசமாஜக் கட்சியிலும் இருந்து தென்பகுதியிலிருந்து 50க்கு மேற்பட்ட பேருந்து மூலமும், விசேட புகையிரதம் மூலமும் ஆயிரக்கணக்கானேர் வந்து சமூகமளித்ததையும் திரு. விசுவநாதன் அவர்கள் மறக்க முடியுமா! மறைக்க முடியுமா?

### 'ஈழ நாடே' வாயை...

—4-ம் பக்கத் தொடர்

தமிழர் சமுதாயத்தின் கருத்துக்களாக தயவு செய்து எடைபோட்டுவிடாதீர்கள்! ஈழத தமிழ் சமுதாயம் உங்கள் தொண்டுக்காக உங்களை மனமார வாழ்த்துகிறது!

### -வது மாடியிலல்ல; சிறை வாசலில்!

சி. ஐ. டி. அதிகாரியொருவரினுல் விசாரணை முடிந்து அழைத்துவரப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்கள் இன வெறிகொண்ட சிங்கள அலுவலாளர் ஒருவரால் கள்ளத்தோணிகள், பறைத் தமிழர்கள் என்று இம்சிக்கப்பட்டதாகசென்றகிழமை ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம் அல்லவா? இந்தச்சம்பவம் நடைபெற்றது 4-வது மாடியில் அல்ல என்றும் கொழும்பு C.R.P. சிறைச்சாலை வாசலிலேயே நடைபெற்றதாகவும் இப்போது தெரியவருகிறது.

### உணவு கொடுக்க...

—1-ம் பக்கத் தொடர்

யமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்குஎழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கவிஞர் காசி ஆனந்தனின் சகோதரியின் கணவர், காசி ஆனந்தனுக்கு உணவு கொடுப்பதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்றபோது, அங்குள்ள சிறையதிகாரிகள், காசி ஆனந்தனைப் பார்ப்பதற்கு அவரை அனுமதிக்கமுடியாது என்று திருப்பியனுப்பி விட்டனர். இந்தச் சம்பவத்தை நீதியமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ள தந்தை செல்வநாயகம், மேலும் அவருக்கு எழுதியிருப்பதாவது:-

"எந்தக்குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்படாமலும், நீதிவிசாரணை இன்றியும் மாதக்கணக்காகவும், ஆண்டுக்கணக்காகவும் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு அவர்களது அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் கூட மறுக்கப்படுகிறது. நல்ல உணவு சாப்பிடுகின்ற உரிமை கூட அவர்களுக்கு மறுக்கப்பட வேண்டுமா?

"தடுப்புக்காவலில் இருக்கும் எந்த ஒரு இளைஞரையும் அவரது குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் சென்று பார்த்து உணவு வழங்குவதற்கு சிறைச்சாலை அதிபருக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறையில் மாதக் கணக்காகவும், வருடக்கணக்காகவும் விசாரணையின்றி அடைத்து வைத்திருக்கும் தமிழ் இளைஞர்களை உடனடியாக நீதிமன்றத்துக்கு கொண்டு வரவேண்டும் அல்லது அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் வற்புறுத்த விரும்புகிறேன்."

#### பதில்!

தந்தைசெல்வா அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்துக்கு சிறைச்சாலை ஆணையாளர் அனுப்பியுள்ளபதிலில், "தடுப்புக்காவலில் உள்ளவர்களை இரத்த உறவினர் மட்டும்தான் (அதாவது பெற்ருேர், சகோதரர், சகோதரிகள், திருமணம் செய்திருந்தால்—அவர்களது மனைவிகள், பிள்ளைகள்) பார்க்க முடியும், காசி ஆனந்தனின் சகோதரியின் கணவர் காசி ஆனந்தனுக்கு இரத்த உறவினர் அல்லர் என்றும் அவரை அனுமதிக்கமுடியாது என்றும் எழுதியுள்ளார்.

### தமிழரசுக்கட்சி மத்திய செயற்குழு கூடுகிறது!

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 11-11-74 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

### பத்து வயதுச் சிறு...

—1-ம் பக்கத் தொடர்

ருந்த தியாகி சிவகுமாரனின் படத்தைப் பார்த்து 'இவனைக் கும்பிடுகிறவர்களா நீங்கள்?' என்று கேட்டுவிட்டு, அப்படத்தையும் பிடுங்கி வீசியதாகத்தெரிகிறது.

பிரான்சிசின் சகோதரரை பொலிசார் முன்பு ஒருமுறை கைது செய்து பின்னர் விடுதலை செய்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### யாழ்வளாக அனுமதி!

யாழ் வளாகத்தில் 125 மாணவர்கள் முதன் முதலாக எடுக்கப்பட்டதாகவும் இதில் 80 பேர் சிங்களவர் என்றும், 45 பேர் தமிழர் என்றும் அரசாங்க சார்பு ஏடான சிலோன் டெயிலி நியூஸ் அதன் 28—10—74 இதழில் ஒரு முன்பக்கச் செய்தியை வெளியிட்டிருந்தது. அச்செய்தியை சென்ற வார சுதந்திரனிலும் மறுபிரசுரம் செய்திருந்தோம்.

ஆனல் பின்னர் நாம் அறிந்தவரை - அனுமதிக்கப்

8—-ம் பக்கம் பார்க்க

### அனைத்துலக நிறு...

—1-ம் பக்கத் தொடர்

களின் அடிவருடிகளும் தாங்கள் கவனமெடுப்பதுபோல காட்டிக்கொள்ளத் தொடங்கியிருக்கிருர்கள்.

நீதி விசாரணையின்றி உலகில் எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் யாராவது அரசியல் காரணங்களுக்காக சிறைவைக்கப்பட்டிருந்தால் அவர்களின் சார்பில் வாதாடும் ஓர் அனைத்துலக நிறுவனமே இந்த "இன்டர் நேஷனல் அம்னஸ்டி" என்ற நிறுவனமாகும்.

சில மாதங்களுக்கு முன்னர் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் இலண்டன் சென்றிருந்தபோது — இந்த நிறுவனத்தினரைச்சந்தித்து இலங்கையில் தமிழ் இளைஞர்கள் விசாரணையின்றி, சிறைவைக்கப்பட்டிருக்கும் கொடுமை பற்றி எடுத்துச் சொல்லியிருந்தார். அப்போது அவர்கள், சிறையிருக்கும் தமிழ் இளைஞர் சம்பந்தப்பட்ட முழு விபரங்களைம் தமக்கு அனுப்பி வைக்கும்படி திரு. தர்மலிங்கத்திடம் கேட்டிருந்தனர்.

திரு. தர்மலிங்கம் இலங்கை வந்த பின்னர், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் முழுவிபரங்களும் அடங்கிய விபரமான பட்டியல் ஒன்றை "இன்டர் நேஷனல் அம்னஸ்டி" எனும் இந்த நிறுவனத்திற்கு தமிழர் கூட்டணி அனுப்பி வைத்திருந்தது. அதைத் தொடர்ந்தே இந்த அனைத்துலக நிறுவனம், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டு அதை இலங்கை அரசின் கவனத்துக்கும் கொண்டு வந்தது.

"இன்டர் நேஷனல் அம்னஸ்டி" எனும் நிறுவனம் தமிழ் இளைஞர் பிரச்சினை சம்பந்தமாக அரசுக்கு எழுதியிருப்பதை கடைசியாக நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் துணை பாதுகாப்புஅமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி ஒப்புக் கொண்டுள்ளார்.

இலங்கையில் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக நடைபெறும் இந்த அநீதி தமிழர் கூட்டணியின் மூலம் உலகெலாம் பரவி—உலகநிறுவனம் ஒன்றும் அதில் அக்கறை காட்டத் தொடங்கிய பின்னர்தான் ஆளுங்கட்சியின் ஆதரவு ஏடான 'ஜனவேகம்' இந்த இளைஞர்கள் பற்றி எழுதியது. (அதுவும் சிங்கள 'ஜனவேகய' இது பற்றி எதுவும் எழுதவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.)

தமிழ் மக்களுக்கு எதிராக தாங்கள் நடத்தும் அக்கிரமங்கள் வெளியே தெரிந்துவிட்டதே என்கிற பரபரப்பில்தான் — யாழ்ப்பாணம் சென்றிருந்த பிரதமரும் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றி திருவாய் மலர்ந்தார். (அப்படி திருவாய் மலர்ந்து ஒரு மாதம் ஆகியும் இன்னும் எதுவித நடவடிக்கையும் இது சம்பந்தமாக உருப்படியாக எடுக்கப்படவில்லை!)

இந்த நிலையில் துரோகப் பரோ—ஒலிபெருக்கி மூலம் தனது கையாட்களை விட்டு யாழ்ப்பாண வீதிகள் தோறும் தன்னல் தான் தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்படப் போகிருர்கள் என்று நடத்திவரும் கோமாளித்தனமான பிரச்சாரத்தைக்கேட்டு நகரமக்கள் சிரிப்பாய்ச் சிரிக்கிருர்கள்!

### நடேசானந்தம்!

—1-ம் பக்கத் தொடர்

லாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளராக கடமையாற்றுபவர்.

கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த அதிபர் திரு. சி. பூபாலரத்தினம்,தெய்வானை ஆகியோரின் இரண்டாவது மகனை இவர் கதிர்காம யாத்திரை மேற்கொண்டிருந்தபோது, 24-7-74ல் வழியில் வைத்து சி.ஐ.டி. அதிகாரிகளினுல் கைதுசெய்யப்பட்டார்.

இவர் மீதான வழக்கை கொழும்பில் விசாரிப்பதையும், கொழும்பில் அடையாள அணிவகுப்பு நடத்துவதையும் நீதிமன்றத்தில் இவர் சார்பாக வாதாடிய சட்டத்தரணியும் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் நீதிமன்றத்தில் கடுமையாக ஆட்சேபித்தது தெரிந்ததே.

எனினும் இறுதியாக அடையாள அணிவகுப்பு கொழும்பில் நடைபெற்றபோது — அடையாளம் காட்டவந்தவரான யாழ் பொலீஸ் சுப்ரின்டெண்ட் திரு. சந்திரசேகரா "I think he is the person" (இவராகத்தான் இருக்கவேண்டுமென்று நான்நினைக்கிறேன்) என்று தெரிவித்தாராம்!

அதன் பின்னரும் இவரை விடுதலை செய்யாமல் தடுப் [illegible] சிங்கள ஆட்சி!

### தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு யாழ்ப்பாணத்தில் கூடுகிறது!

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழுக் கூட்டம் 9-11-74 சனிக்கிழமை காலை யாழ் நகரிலுள்ள தமிழர் கூட்டணியின் தலைமைச்செயலகத்தில் தந்தை செல்வா அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது. தமிழர் கூட்டணியின் அடுத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவிருக்கும் இக்கூட்டத்தில் சட்டத்தரணி திரு. வி. குமரகுரு அவர்களினுல் கூட்டணி ஆலோசனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் திட்டம் பற்றியும் ஆராயப்படும்!

### ஐ. நா. மனித . . .

—1-ம் பக்கத் தொடர்

பாட்ட ஊர்வலங்களை நடத்தி, ஆங்காங்குள்ள ஐ. நா. சபை நிறுவனங்களுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி மகஜர்கள் சமர்ப்பிக்குமாறு தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுக்கும் என்றும் தெரிகிறது.

தமிழ் ஈழத்தின் பல பகுதிகளிலும் கண்டனக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் டிசம்பர் 10ம் திகதி நடத்துவது பற்றி தமிழ் இளைஞர் பேரவையும் முடிவு செய்யவிருக்கிறது.

### நன்றி அறிவித்தல்

துன்னலையைச் சேர்ந்தவரும் கட்டுடை வாசியுமான இடைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. வ. கணபதிப்பிள்ளை கடந்த 30-10-74 புதன் கிழமை காலமானர். அன்னரது ஈமக்கிரியைகள் 31-10-74 வியாழக் கிழமை காலை நடைபெற்றன.

காலஞ்சென்ற திரு. வ. கணபதிப்பிள்ளை, தையல்நாயகியின் அன்புக் கணவரும், சரஸ்வதி தேவி, சிறீபதிதாசன் (உயர் நீதிமன்ற முதலியார்) பேரின்பவல்லி, சிவசுப்பிரமணியம் (சிங்கர் கம்பெனி) ஆகியோரின் தந்தையும், விநாயக மூர்த்தி (புகையிரத நிலைய அதிபர் தம்புத்தேகம.) நந்ததேவி சண்முகம் (எண்ணெய்க் கூட்டுத்தாபனம்), ஜகதீஸ்வரி ஆகியோரின் மாமனுமாவர்.

அன்னரது மரணச்சடங்கில் பங்கு பற்றியோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் மலர் வளையங்கள் அனுப்பியோருக்கும் மேற்குறிப்பிட்டவர்கள் தங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு முற்போக்குவாதியின் இலக்கிய "ரசனை"!

அண்மையில் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தினர் பாரதி விழா நடாத்தினர். அவ்விழாவின் போது பேச்சாளர்களின் வாய்களில் இருந்து எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே முத்துக்கள் உதிர்ந்தன. (முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர் திரு. எச். எம். பி. மொகிதீன் பேசும்போது சில கற்கள் கூரை மேல் விழுந்து ஓட்டுத்துண்டுகளும் உதிர்ந்தன)

"முற்போக்காளர்கள்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கொம்யூனிஸ்டுகளின் தனி ஆதிக்கம் இந்து இளைஞர் மன்றத்தில் நடந்துகொண்டிருப்பதால் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரித்து வரும் நீர்கொழும்பு வாழ் தமிழர்களும்—அன்று கடைசியாக நடைபெற இருந்த நடன விருந்தைக் காண்பதற்கு முற்கூட்டியே இடம் பிடித்துக்கொண்டு பேச்சுக்களைப் பொருட்படுத்தாமல் சகித்துக் கொண்டிருந்த அவையோரும், ஏனையோரும் "பயனடைய" வேண்டும் என்ற பெருநோக்கோடு அன்றையபேச்சாளர் உதிர்த்த பல முத்துக்களில் சிலவற்றைக் கீழே தருகிறேன்:- (நினைவிலிருந்தே எழுதுகிறேன். ஆகையால் இவற்றில் சில சிறு மாற்றங்கள் இருக்கலாம்)

"தமிழ் எனது உயிர், தமிழ் எனது மூச்சு" என்றெல்லாம்சொல்பவர்கள் வெறும் உணர்ச்சி வசப்பட்டவர்கள் அறிவு முதிர்ச்சி அடையாதவர்கள் என்றும் சொல்லலாம். என்னுடைய அம்மா அச்சா அம்மா என்று குழந்தைப் பிராயம் வரைதான் சொல்லுவோம்'

"மொழி என்பது ஒரு சாதனமே. நாம் பிற இடத்துக்குப்போக வேண்டுமானல் கரத்தையில் செல்கிறோம், அல்லது காரில் செல்கிறோம், அல்லது பஸ்ஸில் செல்கிறோம். காரையோ கரத்தையையோ மாற்றுவது போல எளிதாக மொழியை மாற்றுவது சாத்தியமில்லாததால் தமிழைக் கட்டிக் காக்கவேண்டியுள்ளது."

"பாரதியின் கவிதைகளுக்கு ஓரளவு சமமானதாகக் கருதக்கூடிய கவிதைகளை இயற்றிய ரவீந்திரநாத் தாகூரின் புகழ் உலகமெலாம் பரவ, பாரதியைப் பற்றி ஒருவரும் அறியாமல் இருந்ததற்குக் காரணம் அவர் கவிதை புனையக் கையாண்டதமிழ்மொழியே'

"திராவிடமொழியே இந்தியாவின் தனிமொழியாக இருக்கவேண்டும் என்பதே திராவிடக் கழகத்தின் கொள்கையாகும்."

"வகுப்பு வாதிகளான திராவிடக் கழகத்தினருடன் தன்னையும் இணைத்து விடுவார்கள் என்ற அச்சத்தால் தான்பாரதிதமிழ்மொழியை வளர்க்கப் பாடுபட்டதோடு "தேசிய ஒற்றுமை" பற்றியும் பாடியுள்ளார்."

"மெட்ராசில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டுக்குச் சென்ற ஒரு இலங்கைப் பிரமுகர், 'மகா ஜனங்களே, இந்தியத் தமிழராகிய நீங்களும் இலங்கைத் தமிழராகிய நாங்களும் ஒன்றுக்கிருக்கவேண்டும் என்று சொன்னார். இதைக்கேட்டு வந்த ஒருவர் நம்ம வீட்டில் அதைச்சொன்னார். அப்போ நம்ம வாப்பா சொன்னார். 'நான் ஒரு நாளைக்கு நாலு தரம் ஒண்டுக்கிருக்கிறேனே! என்று"

"நாய்களைப் பற்றி அதிகமாகப் பாடிய கவி பாரதி தான்!"

"காப்பியம் இயற்றுவதற்கு வெண்பா என்று இலக்கணம் இருக்க, பாரதி தன் காப்பியத்தை நொண்டிச் சிந்தில் ('காவடிச் சிந்து'?) இயற்றினர்."

"பாஞ்சாலியின் கூந்தலைப் பிடித்து துச்சாதனன் இழுத்துக்கொண்டுபோனன் இந்தக் காலத்துப் பெண்களுடைய கூந்தலை அப்படிப் பிடித்து இழுத்தால் இது கையோடையே வந்துவிடும்."

"தருமர் சூதாட்டத்திலே திரௌபதியைத் தோற்றதும், துரியோதனன் சொன்னன், 'அடே தம்பி துர்ச்சாதன, பாஞ்சாலியைப் பிடித்து இழுத்துவா, ஏனென்றல் நான் அவளைத் துகிலுரிந்து பார்க்க வேண்டும்! (மாதவிலக்காதலால் ஓராடை தன்னிலிருந்த) திரௌபதியின் துகிலை உரிந்து பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை!"

** ** **

இவைதான் அந்த முற்போக்காளரின் சிந்தனைகள்!

"மன்றிடையுள்ளான் நின் மைத்துனன் நின் ஓர் தலைவன் நின்னை அழைக்கின்றன் 'நீள்மனையில் ஏவலுக்கே' என்ன உரைத்தவளை இங்கு கொணர்வாய்" என்றுதான் துரியோதனன் சொன்னன் என்பதும்,

துரியோதனனுடைய தம்பிகளில் ஒருவனுகிய விகர்ணனே பாஞ்சாலிக்குச் சார்பாக நீதியை எடுத்து உரைத்ததையும், அவையிலிருந்த பல மன்னர் அதை ஆதரித்து ஆர்ப்பரித்ததையும் கண்டு பொறுக்காத கர்ணன்தான், "யாரெடா பணியாள்! வாராய், பாண்டவர் மார்பில் ஏந்தும் சீரையும் களைவாய்" என்று சொன்னன் என்பதும் சிறுவரும் அறிவர்:

ஆனல் பாரதி எக்கேடு கெட்டால் என்ன, காப்பியம் என்ன ஆனல் என்ன, அதிகமாகப் பாவையரும் 'பாப்பாக்களும்' இருந்த அவையில் 'முற்போக்கு ரசனை'யை வெளியிடுவதன்றே முக்கியம்!

** ** **

## திருக்கோணமலை மாவட்டத்தில் 'புதுமைநெஞ்சங்களின்' இலக்கிய சந்திப்பு

திருக்கோணமலை [illegible] இலக்கிய உலகு என்றுமே கண்டிராத "மாபெரும் புதுமைக் கவியரங்கு 30-10-74 புதன் கிழமை திருமுருகானந்த சங்க வாசிகசாலை கட்டடத்தில் நடந்தேறியது. புதுமை நெஞ்சத்தினரின் சார்பினில்—சுந்தா, நவசோதிராசா விடுத்த "செந்தமிழ்தாய் சிரிக்கும் நாள்...என்று வந்திடுமோ? —வந்த கவிஞர்களே ஏடுகளை திறவுங்கள்" என்று தலைமைக் கவிதொடுத்தார் கவிஞர் திருக்கோணமலைக் கவிராயர்.

வந்தார் கவிஞர் வணங்காமுடி—அமுதத் தமிழ் மொழியின், அடிமைத் தளை ஒடிக்க, கண்ணின் மணி நிகர்த்த, காசி ஆனந்தனின், பொன் உள்ளம் தனக்கே—புனைந்தே — தனது கவிதையினை காணிக்கையாக்கி, செந்தமிழன் எதிரிகளின், சிரசுகளை அறுத்து, செங்குருதிதனை அள்ளி, தேகமெல்லாம் குளி

## இலக்கிய உலகு
- "வேதாளம்" -

த்து, தலைநிமிர்ந்து சாலைகளில் நாம் நடக்கும் நன்நாள் அந் நாளே, நம் செந்தமிழ்த் தாய் சிரிக்கும் நாள்..." என்று முழக்கமிட்டார்.

அடுத்தடுத்து கவிதொடுத்த கவிமன்னர்கள்மாவை செல்வராசன், என். எல். கருணநிதி, முகில் வாணன், அப்துல்கபூர், காந்திமகேஸ், நிலவின்தாசன், கன்னித் தமிழன் முதலியோர்விண்ணதிர தமிழின் யாழிசைத்து பாமாலை தொடுத்தனர்.

'நல்லை அமிழ்தன்' தாழ்ந்த தொனியில் சிங்கங்களின் குகையினில் சிறுத்தை நானென புதுக்கவிதை பாடினர். "ஓர் நாள் காலை விடியும் வேளை——'ஈழத்தமிழகம் பிறக்குமென' சபதமெடுத்து குரல் கொடுத்தார் தமிழ்தாசன்.

புதுமை நெஞ்சங்களின் சார்பினில்— அடுத்த இலக்கிய சந்திப்பு சிறுகதையரங்கென்று அறிவித்து — ஒத்துழைத்த சகலருக்கும் — செந்தமிழ் தாய் சிரிக்கும் நாள் என்று வந்திடுமென்று கண்டுவிட்ட பூரிப்பினில்— நன்று உரைகவி பாடினர் நவசோதிராசா.

திருக்கோணமலை நகரினில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் பங்கு பற்றிய இலக்கிய நிகழ்ச்சி இதுவே என்று— "புதுமை நெஞ்சங்கள்" பாராட்டு பெற்றார்கள்.

—ந.க.

** ** **

## ஏ. ரி. பொவுக்கு பாராட்டு விழா!

இலங்கை அறிவியக்கமும் கமலாலயமும் கலைக்கழகமும் இணைந்து கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களுக்கு, அவரது கால் நூற்றாண்டு கலைச் சேவையை பாராட்டி இன்று (10-11-74) கொழும்பில் விழா எடுக்கின்றன.

திரு. ஏ. ரி. பொ. அவர்களைப் பற்றி விழா அமைப்புக்குழு செயலாளர் வேல் அமுதலிங்கம் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில் ஒரு பகுதி வருமாறு:-

கலைப்பேரரசின் குழந்தைப் பருவத்தைப் பார்ப்போமேயானல், அங்கேயும் நாடகப் பித்துப் பிடித்த குழந்தையாகவே கலைப்பேரரசைக் காணலாம். கலைப்பேரரசின் நண்பர்கள், இன்றும் தம்மைக் குழந்தையான கலைப்பேரரசு ஓய்வான நேரங்களில் எல்லாம் வசதியானவீட்டுத்தாவாரம் அல்லது விருந்தைகளுக்குக் கூட்டிச்சென்று 'பிரகலாதன் இரணியன்' நாடகம் போன்ற பல நாடகங்களைப் பழக்கி எப்படி ஆட்டிவித்தார் எனச்சொல்லி மகிழ்வர். கலைப்பேரரசு இரணியன் வேஷத்தில் தோன்றி நடித்தால் தம்மை உண்மையில் கதி கலங்க வைக்குமாம்.

இவையெல்லாம் எமக்கு எதனை உணர்த்துகின்றன? கலைப்பேரரசின் மூச்சும்பேச்சும் கலையே தான்—நாளும் பொழுதும் நாடகமே தான் என்பதையே!

அவர் நல்லதொரு கலைஞன் மட்டுமல்ல, நாவலன்— எழுத்தாளன் — திறனய்வாளன்—பட்டதாரி — ஆசிரியன்—சமூக சேவையாளன் —தமிழ்த்தொண்டன்— சிவநெறிவாதி — தேசபக்தன், அத்தனையுமே!

கலைப்பேரரசு ஏ. ரி. பொ. அவர்கள் நேரத்திற்கு எதையும் செய்ய, நேரம் தவருது அலுவல்கள் நடந்தேற ஊக்குவிப்பவர். நேரத்தைக் கவனிக்கவேண்டுமெனக் கண்டிப்பாக இருப்பவர்.

'கடமைகளைத் தட்டிக் கழிப்பதையோ, பொறுப்புக்களை அசட்டை செய்வதையோ அடியோடு வெறுப்பவர் ஏ. ரி. பொ. கடமையே கண்ணுக இருக்க வேண்டுமென வற்புறுத்துபவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன அவரின் மூல மந்திரங்களாம்

## விஸ்வமடுவில் தமிழர் கூட்டணி கிளை

விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்ட தமிழர் கூட்டணி கிளையின் புதிய செயற்குழு தெரிவு கூட்டணிசெயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் மேற்பார்வையில் 31-10-74இல் நடைபெற்றது. தலைவராக திரு. நா. சி. பத்மநாதனும் உபதலைவராக திரு. செ. இராபதுரையும் செயலாளராக திரு. ப. வை. ஜெயபாலனும் துணைச்செயலாளராக திரு. கிறிஸ்டி மகேந்திரனும் பொருளாளராக திரு. சொ. யோகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் ம. ஆ. விநாயகமூர்த்தி, இ. நம்பியாரூரன், சி. ஆறுமுகம், சி. சுப்பிரமணியம், என். எஸ். செல்வரத்தினம் எஸ். ராஜரத்தினம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

## வாசகர் கருத்து

அன்புள்ள ஆசிரியர்! கோவை அண்ணவுக்கு:-

நீங்கள் சுதந்திரனில் தொடர்ச்சியாக எழுதிய தியாகி சிவகுமாரனின் வரலாறு படித்தோம். படித்ததும், அவனைப்போல இலட்சிய வீரர்களாக நாங்களும் வாழவேண்டுமென்ற ஆர்வம் பல நண்பர்களுக்கு பிறந்திருக்கிறது. சிவகுமாரனின் வரலாற்றை நூலாக வெளியிடுங்கள்.

—பா. சின்னத்துரை
செங்கலடி.

***

"சிவகுமார் என்றிடும் போதினிலே" என்னும் கட்டுரைத்தொடரின் இறுதி அத்தியாயத்தையே படித்தேன். சுவையாக இருந்தது. முதல் 9 அத்தியாயங்களும் படிக்கவில்லை. அவை வெளிவந்த பத்திரிகைகளை அனுப்புவீர்களா?

க. மகாலிங்கம்
திருக்கோணமலை.

மன்னிக்கவும் — பழைய பிரதிகள் கைவசமில்லை. நூலாக வரும் வரை பொறுத்திருங்கள்!

***

அன்புள்ள கோவையண்ண,

சிறிமாவின் வருகையை எதிர்த்து தமிழர் கூட்டணியும் த. இ. பேரவையும் எடுத்த சகல நடவடிக்கைகளும் பரிபூரண வெற்றியளித்தது பற்றி துணிச்சலுடன் சுதந்திரனில் வெளியிட்டுவந்த தங்கள்விரத்தை எப்படிபாராட்டுவதென்றே தெரியவில்லை.

—மலராசி
மயிலிட்டி.

***

அன்புள்ள கோவையண்ண,

உங்கள் பொறி பறக்கும் எழுத்துக்களால் கவரப்பட்டு, உங்கள் தமிழ்ப் பக்தியைக் கண்டு பெருமகிழ்வு அடையும் தம்பிகளில் நானும் ஒருவன். ஒவ்வொரு கிழமையும் சுதந்திரன் எப்போது வரும் என்று ஆவலுடன் காத்திருந்து வாங்கிப் படிக்கிறேன். என்னையும் உங்கள் தம்பிகளில் ஒருவராக ஏற்றுக்கொள்ளுங்கள்.

—பொ. கிருபானந்தன்
பருத்தித்துறை.

***

அஞ்சாது... கண்கள் துஞ்சாது ஆருயிரை அரும்பொருளென மதியாது... அன்னை தமிழுக்கே தன்னுயிரை ஈந்து—அடிமைத்தமிழ் அவனியில் ஓர் ஒளிவிளக்கையேற்றி...அழகான தோர் பாதை காட்டி அமரனன அண்ணன்...அன்புச் சகோதரன் வரலாற்றை, "சிவகுமார் என்றிடும் போதினிலே" என்ற தலைப்பின் கீழ் சுவைபட, நயம்பட, பாசக் கண்ணீர் வழிந்தோடப் பத்துத்தொடர்களாகப் படைத்தளித்திட்ட "கோவை" அண்ணவைப்பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி...பலவற்றை மென்மேலும் படைத்தளிக்க இறைவன் அருள்கோரி விடை பெறுகின்றேன்.

—எஸ். கே. எஸ். உதயன்
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறையில்

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் ஆளுங்கட்சி அடிவருடிகளுக்கு மரண அடி!

**திரு. முருகையா போன்ற ஆளுங்கட்சி ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்குவதாகக் கூறப்படும் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. 31 கிளைகளிலும் உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே அங்கெல்லாம் வாக்களிப்பு நடைபெறவில்லை. இவ்விடங்களில் எல்லாம் தமிழர் கூட்டணி ஆதரவாளர்களே பெருமளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

ஆனல் காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 11ம் இலக்கக் கிளையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் தமிழர் கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கும் மத்தியில் போட்டி ஏற்பட்டதால் வாக்கெடுப்பு நடைபெற வேண்டிய சூழல் ஏற்பட்டது. தமிழர் கூட்டணி வேட்பாளர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைகளால் இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட தேர்தல் மூன்ருவது தடவையாகக் கடந்த 21-9-74 சனிக்கிழமை கிளையின் நுகர்ச்சிப் பகுதிக் கட்டிடத்தில் பொலிஸ் பாதுகாப்புடன் மிகவும் பரபரப்பாக நடைபெற்றது.

ஒன்பது இடங்களுக்காக ஆளுங்கட்சியினர் ஒன்பதின்மரும் தமிழர் கூட்டணியினர் ஒன்பதின்மரும் நேரடிப் போட்டியில் ஈடுபட்டனர். திரு. முருகையா போன்றவர்களும் வேறுசில ஆளுங்கட்சிப் பிரமுகர்களும் வரிந்துகட்டி அக்கறையுடன் அயலூர்களில் இருந்துவந்து தமது அணியினருக்கு ஆதரவு தேடியும், அவர்கள் முகத்தில் மக்கள் கரி பூசி விட்டனர். ஒன்பது இடங்களுக்குப் போட்டியிட்ட அவர்கள் ஒன்றையேனும் வென்றெடுக்க முடியவில்லை.

ஒன்பது இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 8 இடங்களைத் தமிழர் கூட்டணியினரும், ஓர் இடத்தை தமிழர் கூட்டணி ஆதரவுடன் போட்டியிட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்தவரும் கைப்பற்றினர். ஓர் உறுப்பினர் பதவியைக்கூட வென்றெடுக்க முடியாத நிலையில் ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்கு காங்கேசன்துறைக் கூட்டுறவுக்கிளை வாக்காளர்கள் பட்டைநாமம் சாத்தினர். வெற்றி பெற்ற 8 உறுப்பினர்களுக்கு ஆதரவாளர்கள் தமிழர் கூட்டணிக் கொடி போர்த்தி மாலை

## இடைத்தேர்தல் முடிவுக்கு இது ஒரு முன்னோடி!

போட்டு கரகோஷம் செய்தனர்;

இத்தேர்தலில் ஒரு சிறப்பு என்னவென்ருல், பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஒரே அணியில் நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றமையாகும். இது தமிழர் கூட்டணியின் சாதி ஒழிப்புக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியென இளைஞர்கள் குரலெழுப்பிக் கோஷித்தனர். காங்கேசன்துறை இடைத் தேர்தல் நடைபெறுமாயின் இதே போன்ற பாடத்தையே ஆளுங்கட்சி வேட்பாளருக்கு மக்கள் அளிப்பார்கள் என்றும் உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

வாக்கு விபரம் வருமாறு: நா. கருணனந்தசிவம் 50; க. மகாலிங்கம் 46; சி. சிதம்பரம் (தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்) 46; தி. திலகநாதன் 45; டாக்டர் ஏ. மு. வரப்பிரசாதம் 45; க. முருகன் 43; செ. முருகையா 42; வ. பவானந்தராசா 41; க. ஆறுமுகம் 39. ஆளுங்கட்சி வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் 31க்கும் 18க்கும் இடைப்பட்ட வாக்குகளையே பெற்றனர்.

# சம்பள உயர்வுபெற கழகத்தின் கீழ் ஒன்றுபடுவீர்!

## தோட்டத் தொழிலாளர்களுக்கு கெங்கரத்தினம் அறைகூவல்!

கடந்த 20-10-1974 பி. ப. 2மணிக்கு இராகலை. இ. தொ. கழக பணிமனையில், கழகத்துணைச் செயலாளர் திரு. எஸ். கெங்கரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உடப்புசலாவ, இராகலை மாவட்ட தோட்டத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் தற்போது தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போதும் என்று ஒரு சாராரும், போதாது என்று ஒரு சாராரும் வாதாடினர். இதன் அடிப்படையில் கருத்தரங்கின் முடிவில் தற்போதைய நிலையில் தோட்டத்தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்கக் கூடிய அளவில் சம்பளம் போதாது. கட்டாயமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்ணயமான மாதச் சம்பளம் வழங்கப்படவேண்டும் என கருத்தரங்கின் முடிவில் வலியுறுத்தப்பட்டது.

துணை பொதுச்செயலாளர் திரு. கெங்கரத்தினம் கருத்தரங்கின் முடிவில் நன்றி உரை மீது பேசும் போது கூறியதாவது:-

"தற்போதைய சூழ்நிலையில் தோட்டத்தொழிலாளி வாழ்க்கைச்செலவை சமாளிக்க முடியாது நலிந்து ஒடிந்து போய் விட்டான். வளர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப சம்பள உயர்வு இதுவரையில் மக்களரசினுல் கொடுக்க நடவடிக்கை யெடுக்கப்படவில்லை. மலைநாட்டில் இயங்கும் தொழிற்சங்கங்களும் இதற்கு சரியான முடிவெடுக்க இதுவரையில் ஒன்றுபடவில்லை. இதனல் தொழிலாளர்கள் நாளுக்கு நாள் செத்துக்கொண்டேயிருக்கின்றனர். இந்நிலை நீடித்தால் மலைநாட்டில் பட்டினிச் சாவு, தடுக்கமுடியாத ஒன்ருகிவிடும். இதே நேரத்தில் அரசு கையேற்ற, சுவீகரித்த தோட்டங்களில் தொழிலாளர்கள் இன்று படும் அவல நிலை மிக மோசமானதாகும். இந்நிலையை ஏற்படுத்தியவர்கள் அரசு சார்பு சங்கங்களேயாகும்.

இப்படியான இக்கட்டான நிலையை உடன் தவிர்க்க தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து உரிமைக் குரல் எழுப்ப வேண்டும். இதற்கு தொழிலாளர்கள் கட்சி பேதங்களை அடியோடு மறந்து அடிப்படை சம்பள உயர்வு பெற நமது கழகக் கொடியின் கீழ் ஒன்று திரள வேண்டும் என்ருர்.

# குமாரசூரியா அமைச்சரான்பின் தமிழ்....

—2-ம் பக்கத் தொடர்

அவ்வேலைத் திட்டங்களுக்கு வந்த தளபாடங்களையும் கல், மண், சிமெந்துபோன்ற பொருட்களையும் லாரிகளில் ஏற்றி முதல் வேலையாக தெற்கே எடுத்துச் சென்றதும் குமாரசூரியர் அமைச்சராக வந்தபின் தான்.

இறக்குமதியாகும் உளவு இயந்திரங்கள், நீரிறைப்பு இயந்திரங்கள், உரம், கிருமிநாசினி எல்லாவற்றையும் தெற்கே விநியோகம் செய்துவிட்டு வடகிழக்கு வயல்களில் வரம்புகளில் நின்றுகொண்டே மார்கெட்டில் புசல் 80 ரூபாவாக விற்கும் பொழுதுகூட 30 ரூபாவிற்கு பறித்து சென்று விவசாயிகளை வறுமையில் வாடவைத்ததும் குமாரசூரியர் அமைச்சரான பின்னர்.

விலைவாசியுயர்வால் பட்டினியால் சாவு, வடகிழக்கு மருத்துவமனைகளில் மருந்தின்றி, டாக்டர்களின்றி, பணியாளர்களின்றி நோயுடன் போராடிச் சாவு, இப்படிப் பரிதாபமாக தமிழ் மக்கள் சாக ஆரம்பித்ததும் குமாரசூரியர் அமைச்சரான பின்தான்!

ரயில் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு, கூட்டுறவு ஊழியர்களின் சுரண்டல், குடியிருப்பவனுக்கே வீடு சொந்தம் என்ற புதிய சட்டம் சிங்களவருக்குச் சொந்தமான வீட்டில் குடியிருக்கும் தமிழ் குடியிருப்பாளரைப் பொறுத்தவரை செல்லுபடியாகாமற் போனது, முக்கிய நகரங்களில் உள்ள தமிழருக்குச் சொந்தமான நிலங்கள், வீடுகள், கட்டடங்கள் சுவீகரிக்கப்படுவது, சோசலிசங்களுக்கு "சம்திங்" கொடுக்காவிட்டால் எதுவுமே கிடைக்காது என்ற நிலை போன்ற இன்னல்களுக்கும், தொல்லைகளுக்கும் தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டது குமாரசூரியர் அமைச்சரான பிறகு தான்.

படிக்காத சிங்களவர்கள் பெரும் பதவிகள் வகிக்க ஆரம்பித்ததும், தமிழ் பட்டதாரி இளைஞர்கள் வேலை இன்றி வாடும் கொடுமை வளர்ந்ததும், தமிழ் அரசாங்க ஊழியர்களின் பதவி உயர்வு மறுப்பு, பதவி குறைப்பு, சம்பளவெட்டு, வேலைநீக்கம் போன்ற மனிதாபிமானமற்ற திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டதும் குமாரசூரியர் அமைச்சர் ஆனபிறகுதான்.

அமைச்சர் குமாரசூரியரின் "வெற்றிப்பட்டியல்" களை நீட்டிக் கொண்டே போனுல் ஒரு "சுதந்திரன்" ஒரு சிறப்பு மலரே வெளியிட வேண்டியிருக்கும். எனவே பட்டியலை இத்துடன் நிறுத்திவிடுவோம்.

தமிழ் மக்களின் உரிமைகள் போய்விட்டன உடமைகள் போய்க் கொண்டிருக்கின்றன உயிர்கள் போக ஆரம்பிக்கின்றன. இந்த நிலையில் அமைச்சர் குமாரசூரியரின் வேண்டுகோளை முக்கிய கவனத்துடன் தமிழ் மக்கள் ஏற்று "யோசித்துச் சிந்தித்து செயலாற்ற வேண்டும்."

1948ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்ட பேர்வழிகள், மயிரிழையால் சென்ற தேர்தலில் பாராளுமன்றத்துள் நுழைந்துவிட்டவர்கள் கூடியிருக்கும் சத்திரமாக வடகிழக்கு சுதந்திராகூடம் உருவாகியிருக்கிறது. தமிழ் மக்களைப் பழிவாங்கத் துடிக்கும் இந்தச் சூழ்ச்சிக்காரர்கள் எங்கெங்கு தமிழினத்தை நிர்மூலமாக்கும் சட்ட திட்டங்கள் உருவாகின்றனவோ அங்கெல்லாம் தோள் கொடுக்க தயாராக நிற்கிருர்கள்.

இந்த ஆபத்தின் மொத்த உருவங்களுக்கு நீலக்கொடி பிடித்து நிலபாவாடையும் விரித்திருக்கிருர்கள். தென்னிலங்கையிலே கூட மாலை போடுபவர்களும், நிலபாவாடை விரிப்பவர்களும் கிடையாது. எம்மவர்கள் தான் இதைச்செய்கிருர்கள்.

தேர்தல் பேச்சுக்கள் அடிபட ஆரம்பிக்கின்றன. கிளிநொச்சித் தொகுதிக்குள் மட்டுமல்ல சிங்கத்தின் குகைகள் ஒவ்வொன்றிற்குள்ளும் சிறுநரிகள் புகுந்து விளையாட ஆரம்பிக்கின்றன. சொல்லவேண்டிய நேரத்திலே சொல்லவேண்டியதை சொல்ல வேண்டியவர்களுக்குச் சொல்லியிருக்கிருர் அமைச்சர் குமாரசூரியர் "தமிழ் மக்கள் சிந்தித்து செயல்படவேண்டியகட்டம் வந்துவிட்டது" என்று. ஏன்? நாம் சந்திக்கப் போகும் தேர்தல் .... யும் பயமின்றிச் செய்பவன்.

கந்தர் சஷ்டி கவசம்

"அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி."

15 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி கந்தர் சஷ்டி கவசம் என்ற புத்தகத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை
த. பெ. என் 77, யாழ்ப்பாணம்.

உங்கள் கஷ்டங்கள்
துன்பங்கள் துயரங்கள் தொல்லைகள் நீங்கிச்
சுபிட்சம் பெறுவதற்கு
1975 தை மாதம் நடைபெறவிருக்கும்
எமது இரண்டாவது தென்னிந்திய
புனித யாத்திரையில்
கலந்துகொள்ளுங்கள்.
முழு விபரங்களுக்குத் தொடர்புகொள்க:
SHIVA-RAMYA TOURS & TRAVELS
37, Raymond Road, Nugegoda,
Telephone 073-2101.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி!

## 1,300 ஏக்கர் காணிக்கு அம்மையார் சொந்தக்காரியாக இருந்த உண்மை அம்பலம்!

"ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி" என்ற தோரணையில், ஊராருக்கு 'முதலாளிப்' பட்டம் சூட்டிவரும், "ஜனவேகயக் கும்பல்" தான் அங்கம் வகித்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசு, ஒரு தேசிய முதலாளித்துவ அரசு என்பதை மூடி மறைத்தும், "தாம் தேசிய முதலாளிகள்" என்ற உண்மையை வெளிக்காட்டாமலும், இந்த நாட்டின் ஏழை, பாட்டாளி வர்க்க மக்களின் பேரால் சோசலிச மயாவாதம் பேசி, பொதுமக்களின் சொத்துக்களையெல்லாம் அபகரித்து, அந்தச் செல்வங்களைக்கொண்டு தாமே (தாய், மகள், மகன், மருமகன்) அனுபவித்து வருவதையும், தமக்குத் தேவையான சகாக்களுக்கு வழங்கி வருவதையும் நாமறிவோம்; இந்த நாடறியும்.

இவ்வாறு, தாம் எல்லாவித சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டு, முதலாளித்துவத்தை ஒழிக்கப்போவதாக சோசலிசக் கூக்குரல் எழுப்புவதன் மூலம் மக்களை மடையர்கள் ஆக்கிவிடலாம் எனக் கனவுகாணுகிறது இந்தக் கும்பல்! இவ்வாறு, ஊருக்கு உபதேசம் செய்து வரும் சோசலிசக் கும்பலின் தலைவியாக வருணிக்கப்படும், நமது நாட்டின் பிரதமர் அம்மாதான், தனது தேர்தல் தொகுதியான அத்தனகலையில் இருக்கும் 1,300 ஏக்கர் காணிக்கு சொந்தக்காரியாக, தேசிய முதலாளிகளுக்கெல்லாம் (தேசிய முதலாளிகளான ஜனவேகயக் கும்பல்களுக்கெல்லாம்) முதலாளியாக இது வரை காலமும் விளங்கி வந்திருக்கிறார் என்பது அண்மையில்தான் தெரிய வந்துள்ளது.

அத்தனகலையில் கையேற்கப்பட்ட 5,000 ஏக்கர் காணியில், 1,300 ஏக்கர் காணி முதலாளி ஸ்ரீமாவோ அம்மாவின் காணி என்பது இப்போதுதான் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது!

பரந்து கிடக்கும் முதலாளித்துவ அமைப்பை அடக்கி, ஒடுக்கி தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்து, அதன் மூலம் ஒரு குறுகிய முதலாளித்துவ அமைப்பை அதாவது "தேசிய முதலாளித்துவ அமைப்பை" உருவாக்கி சுகபோகம் அனுபவித்து வரும் இந்த "ஜனவேகயக் கும்பலும்" அதன் சகாக்களும், இந்த நாட்டு மக்களால் இனம் கண்டு தூக்கியெறியப்படும் நாள் அதிக தூரத்தில் இல்லை!

## தமிழரசுக் கட்சி கொழும்புக் கிளை நிர்வாகிகள்!

இலங்கைத் தமிழரசுக் கட்சி கொழும்புக் கிளையின் புதிய நிர்வாக சபையின் விபரம் வருமாறு:-

தலைவர்—மு. திருச்செல்வம் கி.யூசி, துணைத்தலைவர்கள்—எஸ். சி. சந்திரகாசன் மு. பரராசசிங்கம், செயலாளர்—இ. பேரின்பநாயகம், துணைச்செயலாளர்கள்—த.டிவோட்டா, ந. தங்கராசா, பொருளாளர் — இ. சிறீபத்மநாதன், துணைப் பொருளாளர்-இரா. அருணசலம். செயற்குழு உறுப்பினர்கள் விபரம் வருமாறு: கோவை மகேசன், மா. க. கனகேந்திரன், ஐ. தி. சம்பந்தன், ந. தம்பிப்பிள்ளை, அ. மரியநாயகம், ஆ. பரஞ்சோதி நா. பாலசுப்பிரமணியம், தி. கணபதிப்பிள்ளை ஆர். கே. ஆறுமுகம்,

## யாழ் வளாக அனு..

—5 ம் பக்கத் தொடர்

பட்ட மாணவர்கள் தொகை எல்லாமாக 110 என்றும், இதில் 32 பேர் சிங்களவர் என்றும் 78 பேர் தமிழர்கள் என்றும் தெரியவருகிறது.


கிங்ஸ்லி 4-வது வெற்றி வாரம்!

விஷ்ணுவர்தன, சந்திரகலா நடித்த-
சித்திராலயா அளிக்கும்
ஸ்ரீதரின் அலைகள்

3-வது வாரம்
கெப்பிட்டல்
சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ். வரலட்சுமி, முத்துராமன், சிவகுமார் நடித்த-
ராஜ ராஜ சோழன்
தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த "சினிமாஸ்கோப்" தமிழ் வண்ணச் சித்திரம்.

இப்பொழுது காட்சியளிக்கிறது
பிளாஸா — வெலிங்டன்
ஜெய்சங்கர், பாரதி, சோ, மனோரமா, சுபா நடித்த
பொன் வண்டு

5-வது வாரம்
லிடோ [யாழ்நகர்]
சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-
கே. பாலசந்தரின் எதிரொலி

இப்பொழுது எதிரொலிக்கிறது!
செல்லமகால் 5-வது வாரம்
சந்தர்ப்பம்—சூழ்நிலையினுல் குற்றம் செய்தவர்கள் அதன் பலாபலன்களின் எதிரொலிக்கு தப்பமாட்டார்கள் என்பதை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்.
சிவாஜி, கே. ஆர். விஜயா, நாகேஷ்
எஸ். எஸ். ராஜேந்திரன்,
லட்சுமி - சிவகுமார் - ஜோதிலட்சுமி,
காலஞ்சென்ற வி. எஸ். பாலையா நடித்த-
கே. பாலசந்தரின் எதிரொலி
நீதிமன்ற வழக்கு விசாரணைக் கட்டங்கள் கட்டாயம் பார்க்கவேண்டியவை.

ரீங்காரமிடுகிறது
கெயிட்டி
ஜெய்சங்கர், பாரதி,
மனோரமா, ஜெய்சித்ரா,
சுருளிராஜன், சோ
—நடித்த—
பொன் வண்டு
கேட்டு ரசிக்க தயாராகுங்கள்:- யாருக்காக, இந்த மாளிகை ரத்ன மாளிகை! பாடியவர்:- மனோரமா.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயகமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974 வருடம் நவம்பர் [illegible] ச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org